Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant
❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/3175)

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2044 கார்த்திகை 04 புதன்கிழமை (20.11.2013) பக்கங்கள் 20 ஓசை - 051

# இடம்பெயர்ந்த வலி. வடக்கு மக்கள் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்வு

## யாழ். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த வலி.வடக்கு மக்களை அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள்குடியமர்த்தப்படவேண்டும் என்று யாழ். அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முக்கிய தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த 1990 ஆம் ஆண்டு அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகியதைத் தொடர்ந்து வலி. வடக்கு மக்கள் அங்கிருந்து இடம்பெயர ஆரம்பித்தனர்.

இப்போது யுத்தம் நிறைவடைந்த நிலையில் வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவின் அநேகமான பகுதிகளில் படிப்படியாக மீள்குடியமர்வு செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எனினும் இன்னமும் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவில்லை. இவர்கள் தற்போது நலன்புரி நிலையங்களிலும் தமது நண்பர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்.

நேற்றுக்காலை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். அபிவிருத்திக் குழுக் கூட்டம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின்போது வலி. வடக்கு மக்களின் பிரச்சினைகள் குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விரிவாக ஆராய்ந்தார்.

இன்னமும் மீள்குடியமர்த்தப்படாமல் எஞ்சியிருக்கும் மக்கள் தொடர்பான பூரணமான அறிக்கையொன்றை தமக்கு சமர்ப்பிக்கும்படி தொடர்புடைய அதிகாரிகளை (19) ஆம் பக்கம் பார்க்க

## இராஜதந்திர நெறிமுறைகளை கமரூன் மீறிவிட்டார்

### குற்றம்சாட்டுகிறது அரசு

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டிற்கு வருகைதந்த பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூன் இராஜதந்திர நெறிமுறைகளை மீறியிருப்பதாக அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது என்று பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொள்ளுமாறு அதிகாரியொருவர் பிரதமருக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும் அதிகாரியின் (19) ஆம் பக்கம் பார்க்க

## யுத்தத்துக்குப் பிந்திய யாழ்ப்பாணம் தற்போதைய நிலைமை எப்படி உள்ளது?

### விபரிக்கிறார் யாழ். அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் யுத்தம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 செப்ரெம்பர் வரையான காலப் பகுதிக்கு அபிவிருத்திக்கென 17026 மில்லியன் ரூபா அரசாங்கத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதுடன் அதில் 7169 மில்லியன் ரூபா செலவுசெய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்துள்ளார்.

நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு வரவேற்பு உரையாற்றுகையிலேயே அரச அதிபர் இந்தத் தரவுகளை வெளியிட்டார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் அரச அதிபர் (19) ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் நலன்சார்ந்த விடயங்களில் தீர்க்கமான நடவடிக்கை

### அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

மக்களின். நலன்சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்து தீர்க்கமான தொடர் நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா.

யாழ். தேர்தல் மாவட்டத்துக்கான அபிவிருத்திக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை யாழ். செயல்க கேட்போர் கூடத்தில் நடந்த போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்படி மக்களின் நலன் சார்ந்த பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்புடைய அதிகாரிகளுடன் ஆராய்ந்தார்.

வடமாகாணசபைத் தேர்தல் முடிவடைந்ததன் பின்னர் நடைபெற்ற இந்த முதலாவது யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் யாழ். செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று மு.ப. 9.00 மணியளவில் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களில் ஒருவரான பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆரம்பமாகியது.

யுத்தத்தினால் கொல்லப்பட்ட அனைத்து மக்களுக்காகவும் இருநிமிட அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமாகியது. இதில் ஈ.பி.டி.பி.யின் (19) ஆம் பக்கம் பார்க்க

## புலிகளே யுத்தக் குற்றவாளிகள்; ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது புலிகளே குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். இராணுவப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபடவில்லை என தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்டப் போரின் போது புலிகளே யுத்தக் குற்றச் செயல்களில் ஈடுபட்டனர். எனவே, போர்க் குற்றச் செயல்களில் புலிகள் ஈடுபட்டார்களா என்பது குறித்தே டேவிட் கமரூன் விசாரணை நடத்த வேண்டும் .

புலிகளுக்கும் அவர்களுக்கு ஆதரவளித்த தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் எதிராகவுமே விசாரணை நடத்தப்பட வேண்டும். கமரூனின் வடக்கு விஜயத்தின் போது புலிகளினால் பாதிக்கப்பட்ட தரப்பினரை சந்திக்கவில்லை. (19) ஆம் பக்கம் பார்க்க

## மாகாண கல்வி அமைச்சரின் வாகனம் விபத்தில் சிக்கியது

(கிளிநொச்சி)

வடமாகாண கல்வி அமைச்சர் ந.குருகுலராசா பயணம் செய்த வாகனம் ஏ-9 வீதியில் பரந்தன் பகுதியில் பாதசாரி ஒருவரை மோதித் தள்ளியதில் பாதசாரி காயமடைந்து கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்றுகொண்டிருந்த போது நேற்றிரவு 7.05 மணிக்கு பரந்தன் புகையிரத நிலையத்திற்கு முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. பரந்தனைச் சேர்ந்த சந்தோசம் என்பவரே காயமடைந்துள்ளார்.

சாரதியை கிளிநொச்சி பொலிஸார் கைது செய்துள்ளதுடன், வாகனத்தையும் தடுத்துவைத்துள்ளனர். (ச)

## காணிகள் மீளளிப்பு; கேப்பாபிலவில் இன்று

(முள்ளியவளை)

கேப்பாபிலவுப் பகுதியில் படைத்தரப்பினரால பயன்படுத்தப்பட்டு வந்த தனியாருக்குச் சொந்தமான ஒருதொகுதி காணித்துண்டுகள் உரிமையாளர்களிடம் இன்று மீள ஒப்படைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. இப்பகுதியில் உள்ள சுமார் (19) ஆம் பக்கம் பார்க்க

06



10

மக்களுக்குத் தெரியும்

11

சாட்டையடி

# உள்ளூர் சேவை வழங்க
# நயினாதீவுக்கு புதிய பேருந்து





(நயினாதீவு)

நயினாதீவு உள்ளூர் சேவைக்கென புதிய பேருந்து ஒன்று இலங்கை போக்குவரத்து சபையினால் வழங்கப்பட்டுள்ளது.

நயினாதீவைச் சேர்ந்த பொதுத்தாபனங்களும் பொது மக்களும் உள்ளூர் சேவையில் ஈடுபட்டுள்ள பேருந்து வண்டி அடிக்கடி பழுதடைவதாகவும், பொதுமக்களின் கஸ்டங்கள் குறித்தும் வேலணை பிரதேச சபைத் தலைவரிடம் விடுத்த கோரிக்கையடுத்து அவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு சென்றமையையடுத்து புதியபேருந்து அண்மையில் அங்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச இணைப்பாளரும், வேலணை பிரதேச சபைத் தவிசாளருமான சிவராசா (போல்), சாலை முகாமையாளர் குலைபாலச்செல்வம், வடக்கு ஜனநாயக போக்குவரத்து யூனியன் தலைவர் கெங்கசுதன், செயலாளர் அருட்பிரகாசம், வேலணைப் பிரதேச சபை உறுப்பினர் ந.கருணாகர குருமூர்த்தி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் புங்குடுதீவு இணைப்பாளர் நவம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சின் வேலணை உறுப்பினர் றாம், வேலணை பிரதேச சபை உப அலுவலக நயினாதீவு பொறுப்பதிகாரி மோகனரூபன் வேலணை பிரதேச சபையின் முன்னாள் செயலாளரும் நயினை நாகபூசனி அம்மன் ஆலய நிறைவேற்று அதிகாரியுமான தவராசா மற்றும் பொது மக்களும் கலந்து சிறப்பித்தனர்.

## உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் உதயம்

(யாழ்ப்பாணம்)

உருளைக்கிழங்கு உற்பத்தியாளர், விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம் யாழ்.குடாநாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவு சட்ட திட்டங்களுக்கு அமைய பதிவு செய்யப்பட்டு 3 உருளைக்கிழங்கு உற்பத்தியாளர், விற்பனையாளர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பயனாளிகளுக்கு சேவையளித்து வருகின்றது.

கமக்கார அமைப்பின் ஊடக இக்கூட்டுறவுச் சங்கத்திற்கான உறுப்பினர்கள் அங்கத்தவர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ,பா)

## மானிய விதை உருளைக்கிழங்கு டிசம்பர் முற்பகுதியில் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மானிய விதை உருளைக்கிழங்கு விநியோகத்திட்டத்தின் கீழ் விவசாயிகளால் கோரியிருந்த அளவு டிசம்பர் மாத முற்பகுதியில் வழங்குவதற்கு விவசாய விரிவாக்கல் பிரிவு நடவடிக்கை எடுத்துவருகிறது.

தெரிவு செய்யப்பட்ட 937 பயனாளிகளுக்கும் வழங்குவதற்காக வெளிநாடுகளிலிருந்து தருவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்குகளில் ஒரு இனத்தைச் சேர்ந்த உருளைக் கிழங்குகளைப் பெற்றுக்கொள்வதில் ஏற்ப்பட்ட தாமதத்தால் டிசம்பர் மாத முற்பகுதியில் பயனாளிகளுக்கு அவர்கள் கோரியிருந்த 200 கிலோ விதை உருளைக்கிழங்கை விநியோகிக்க முடியும் என வடமாகாண விவசாய விரிவாக்கல் பிரிவு பணிப்பாளர் தெரிவித்தார்.

இதனடிப்படையில் 132 மெற்றிக்தொன் விதை உருளைக்கிழங்கே வந்துள்ள நிலையில் இவை பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

விரைவில் மிகுதி விதை உருளைக்கிழங்குகள் தருவிக்கப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகிகப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை அந்தர் 1/12 ஆயிரத்து 500 ரூபா விலையிடப்பட்டு பயனாளிகளுக்கு விநியோகிக்கப்பட்டாலும், 50 வீதம் மானியமாக 6 ஆயிரத்து 250 ரூபா மட்டுமே அறவிடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ,பா)

## கல்விக் கருத்தரங்கு

(மானிப்பாய்)

க.பொத சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களை தயார்படுத்தும் முகமாக சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரதேச இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள தொடர் இலவச கல்விக் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதில் 4 ஆவது கருத்தரங்கு இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தில் இன்றும் நாளையும் காலை 8.30 மணி முதல் இடம் பெறவுள்ளது.

இன்று கணித பாடத்திற்கான செலயமர்வும், நாளை விஞ்ஞான பாடத்திற்கான செயலமர்வும் இடம்பெறவுள்ளது. (90)

## நீரிழிவு சிகிச்சை இணையத்தளம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சை நிலையம் நேற்று இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

இவ் இணையத்தளமானது பொது மக்களுக்கான அறிவூட்டல் தளமாக உருவாக்கப்பட்டுள்ளது. பலருக்கு பயன் பெறக்கூடிய மருத்துவ ரீதியான கட்டுரைகள், கவிதைகள், காணொளிகள், செய்திகள் மற்றும் பல சிந்தனைக்குரிய விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இதில் சுகாதார ரீதியான சந்தேகங்களுக்கான விளக்கங்களையும் பெற்றுக்கொள்ளலாம். www.jaffnadiabeticcentre.org என்ற இணையத்தளத்தை பார்வையிடலாம்.

## பழமரக்கன்றுகள் விநியோகம் 75 வீதம் பூர்த்தியடைந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

வாழ்வின் எழுச்சித்திட்டத்தின் கீழ் பழமரக்கன்றுகள் விநியோகம் 75 வீதம் நிறைவடைந்துள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்று யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மிகுதி 25 வீதமான பழமரக்கன்றுகள் மிக விரைவில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் எனவும், கடந்த ஆண்டில் விநியோகிக்கப்பட்ட பழமரக் கன்றுகளில் 50 வீதமானவையே தற்போது பயனளிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ.பா)


# ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1009

திகதி 18.11.2013

வெற்றி எண்கள் 12 20 37 62

ஆங்கில எழுத்து F

ஜக்பொட் பரிசு ரூ. 1,44,95,000/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 1,44,95,000/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 1 | 10,00,000/= | ரூ. 10,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | ரூ. 5,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 271 | 1,000/= | ரூ. 2,71,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 469 | 1,000/= | ரூ. 4,69,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 11859 | 60/= | ரூ. 7,11,540/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6173 | 40/= | ரூ. 2,46,920/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 155232 | 20/= | ரூ. 31,04,640/= |
| ஆங்கில எழுத்து | 22515 | 20/= | ரூ. 4,50,300/= |
| | | மொத்தம் ரூ. | 68,03,400/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 விதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 605251163-0-40 |
| நுவரெலியா | 605249896-3-13 |
| குருநாகல் | 605240677-5-45 |
| கொழும்பு | 605246821-7-27 |
| பொலன்னறுவை | 605242376-3-43 |
| கண்டி | 605252814-4-14 |
| கொழும்பு | 605245159-6-36 |
| மாத்தளை | 605242014-3-33 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 72,03,400/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா. 14,798,980/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2013.11.21 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 2 333546/7

(C/3185)


## திருக்கல்யாண விழா

(பருத்தித்துறை)

வடமராட்சி பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோவில் முருகப்பெருமான் வள்ளியம்மன் திருக்கல்யாண திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் உதயவேளை நடைபெறும் விசேட அபிசேக பூசைகளைத் தொடர்ந்து கந்த புராணப் படிப்பில் வள்ளியம்மன் திருமணப்படலம் படிப்பு ஆரம்பமாகும்.

மாலை 6.15 மணிக்கு திருக்கல்பயாணத் திருவிழா நடைபெறும். தொடர்ந்து சுவாமி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் வழங்குவார். (109)

## இன்று வருகை

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியின் பிறந்த தினம் மற்றும் பதவியேற்று 3 ஆம் வருட நிறைவை முன்னிட்டு மகரகம பிரதேசத்திலிருந்து 150 துவிச்சக்கர வண்டி வீரர்கள் இன்று மதியம் 1.30 மணியளவில் துரையப்பா விளையாட்டரங்கை வந்தடையவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார்.

## விவசாயத் திணைக்களத்தால் இளைஞர்களுக்குப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக இளைஞர்களுக்கு புதிய திட்டங்கள் குறித்து பயிற்சி நெறிகள் இடம்பெற்று வருகின்றது என விவசாய திணைக்கள பணிப்பாளர் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலிருந்தும் 10 இளைஞர்க்ள தெரிவு செய்யப்பட்டு இவ்விவசாய அபிவிருத்தித்திட்டம் தொடர்பான பயிற்சி நெறிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இப்பயிற்சி நெறியின் மூலம் பயன் பெறும் இளைஞர்கள் தமது விவசாய அபிவிருத்தி மேம்பாட்டுக்காக 5 இலட்சம் ரூபா நிதியுதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

மானிய அடிப்படையில் விவசாய உபகரணங்களை இவ் உதவிகள் மூலம் பெற்றுக்கொண்டு வர்த்தக அடிப்படையிலான விவசாய பண்ணைகளையோ, அல்லது வர்த்தக நடவடிக்கைளையோ மேற்கொள்ளமுடியும்.

இத்திட்டத்திற்கான நேர்முகத் தேர்வுகள் விவ்சாய உயர் அதிகாரிகளால் அண்மையில் மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (இ,பா)

# அடிப்படை வசதிகளின்றி வாழும் கணேசபுரம், சேவா கிராமமக்கள்

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் பிரதேசத்திலுள்ள கணேசபுரம் சேவா ஆகிய கிராமங்களில் வாழும் மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றி வாழ்வாதார ரீதியாக பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த யுத்த அனர்த்தங்களில் இடம் பெயர்ந்து மீள்குடியேறியுள்ள இந்தக் கிராமங்களில் கணேசபுரத்தில் 300 குடும்பங்களும் சேவா கிராமத்தில் 38 குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் கிராமத்திலுள்ள மக்கள் கூலித்தொழிலையும் விவசாயத்தையுமே பிரதான தொழிலாக மேற்கொள்கின்ற நிலையில் கூலித்தொழில் மிகக்குறைந்து காணப்படுவதாகவும் விவசாயச் செய்கைக்கான வசதிகள் இக்கிராமங்களில் போதியளவு இல்லாமல் இருப்பதும் இக்குடும்பங்களின் பின்தங்கிய நிலைக்கு காரணமாவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இக்கிராமத்தில் கல்வி வளர்ச்சி பின்தங்கிய நிலையில் உள்ளதுடன் இக்கிராமத்திலுள்ள மாணவர்கள் 4 அரைக் கிலோமீற்றர் தூரம் கொண்ட வெள்ளாங்குளம் பாடசாலைக்கு நடந்து சென்று கல்வி கற்று வருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக் கிராமத்திற்கென பிரதான வீதி புனரமைக்கப்பட்டு வருகின்ற நிலையில் உள் வீதிகள் புனரமைப்பின்றி காணப்படுவதாகவும் மேலும் அரச தனியார் பேருந்து சேவைகள் எவையும் இல்லாதிருப்பதாவும் இதனால் தாம் அன்றாட தேவைகளை பெற கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர்.

மேலும் இக்கிராமத்தில் வீட்டுத்திட்டம் குடிநீர், மலசலகூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளும் இல்லாத நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்நிலையில் இக்கிராமத்திலுள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கென அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு உரிய தரப்பினருக்கு இக் கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (140)

# முல்லை ஓய்வூதியர்களுக்கு இலகுகடன் பான் ஏசியா வங்கி செயற்றிட்டம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பான் ஏசியா வங்கி முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஓய்வூதியர்களுக்கு இலகுகடன்களை வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளது.

மேற்படி மாவட்டத்தில் வசிக்கின்ற ஓய்வூதியர்களுக்கு பிணை நிபந்தனைகள் ஏதுமின்றி இக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் 1 இலட்சம் ரூபா முதல் ஐந்து இலட்சம் ரூபா கடனாகப் பெற முடியும் அத்துடன் இக் கடனுக்கு வருடாந்த வட்டியாக 20 வீதம் மட்டுமே அறவிடப்படும்.

இக் கடன்களைப் பெறும் ஓய்வூதியர்களுக்கு விசேட சலுகையுடன் கூடிய காப்புறுதி வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன. காப்புறுதிக் கட்டணமாக ஒரு இலட்சம் ரூபாவிற்கு 3 ஆயிரம் ரூபா மட்டுமே செலுத்த வேண்டும்.

கடனாளி மரணமடைகின்ற சந்தர்ப்பத்தில் காப்புறுதி நிறுவனம் கடன் தொகையை வங்கிக்குச் செலுத்தவுள்ளதுடன் கடன் பொறுப்புகளிலிருந்து அவரின் உரித்தாளர்கள் விலக்களிக்கப்படுவார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆறுமுகநாவலர் குருபூசைதினம் போட்டி முடிவுகள் வெளியீடு

(மானிப்பாய்)

யாழ்ப்பாண சைவபரிபாலன சபையினரால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

இம் முறையும் போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பலர் பங்குபற்றியுள்ளதாக சைவபரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். இப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் இம் மாதம் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் குருபூசைத் தினத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன.

வெற்றி பெற்றவர்களை அன்றைய தினம தவறாது சமூகமளித்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இப்போட்டியில் முதல் 5 இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு

பேச்சுப் போட்டி

கீழ்ப்பிரிவு

வி.துசாந்தி (வட்டு மத்திய கல்லூரி)

உ.மகிழினி (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்)

செ.சாயித்தியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

ந.அபிராமி (கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்)

யோ.சுதனிகா (கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்)

மத்தியபிரிவு

அ.சரணியா (கிளி/ முக்கொம்பன் அ.த.க பாடசாலை)

சி. சங்கவி (வட இந்து மகளிர் கல்லூரி)

இ.கஜனி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

சி.நிஷாயினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

ர.அர்ச்சனா (முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி)

(48) தொடரும்...



**ஜனாதிபதியின் பிறந்த நாளையொட்டி இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வளாகத்தில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரா தலைமையில் நடைபெற்ற மரம் நடுகை திட்டத்தில் ஹென்றியரசர் கல்லூரியின் அதிபர் அருட்தந்தை ஜேசுதாசன் அடிகளார் உட்பட பொலிஸாரும் மாணவர்களும் மரம் நடுகையில் ஈடுபடுவதையும் காணலாம்.**




# போகும் இடத்தை விட்டுப் பொல்லாத இடம் தேடி...

ஒருவர் நோய்வாய்ப்பட்டால் அவர் மருத்துவரிடம் காட்டினாலே அந்த நோயைக் குணப்படுத்த முடியும்.

ஆனால் பலர் தங்களுடைய நோயை முறைப்படி உரிய மருத்துவரிடம் சொல்லியோ காட்டியோ மருத்துவம் செய்வதை விட, தாங்கள் நோயாளிகள் என்று கண்ட நிண்ட ஆட்கள் எல்லோரிடமும் சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். சிலர் தங்களின் நோயைச் சொல்லிப் புலம்புவதும் உண்டு.

இதுவும் ஒரு வருத்தம்தான்.

மருத்துவரிடம் போகாமல், அவரிடம் தன்னுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசாமல், ஊருக்கோ உலகத்துக்கோ புலம்புவதால் பயனேதுமில்லை. பதிலாக நோய்தான் முற்றும்.

நோய் முற்றினால் சாவுதான்.

தமிழ் மக்களும் நோயால் பீடிக்கப்பட்டவர்களே! ஏற்கனவே அவர்களுக்கு ஏராளம் பிரச்சினைகள்.

அரசியற் பிரச்சினை, வாழ்க்கைப் பிரச்சினை, காணாமற்போனவர்களின் பிரச்சினை என ஏராளம் பிரச்சினைகள்.

இதைத் தீர்க்க வேண்டிய மருத்துவர் இலங்கை அரசே.

ஆனால், இலங்கை அரசு நோயைத் தீர்க்கக் கூடிய நல்ல மருத்துவராக இதுவரை இருந்ததில்லை என்பதும் கவனிக்கவேண்டிய ஒன்றே.

ஆனாலும் நமக்கு வாய்த்த மருத்துவர் அப்படித்தான் உள்ளார்.

நாம் விரும்பினால் என்ன, விரும்பாது விட்டால் என்ன அவரிடமே எங்களின் நோயைக் குணப்படுத்த வேணும்.

நாங்கள் இன்னொரு மருத்துவரை நாடி இந்தியாவை அழைத்தால் என்ன, நோர்வேயை அழைத்தால் என்ன, யப்பானை அழைத்தால் என்ன, அமெரிக்காவை அழைத்தால் என்ன, அவர்களும் இலங்கை அரசையே காட்டி விட்டுக் கப்பல் ஏறுகிறார்கள்.

ஆனால், நாங்களோ, உரிய ஆளை நாடாமல் கண்டவன் நிண்டவன் என எல்லாருக்கும் எங்களின் வியாதியைக் காட்டிக் கொண்டும் அதைப்பற்றிப் புலம்பிக் கொண்டுமிருக்கிறோம்.

யாராவது ஒரு வெள்ளைத் தோலைக் கண்டால் போதும் தமிழர்கள் ஒரு பாட்டம் ஒப்பாரி வைக்கத் தொடங்கி விடுவார்கள்.

கையுக்குள்ள குத்துது, நாரிக்குள்ள பிடிக்குது, தலைக்குள்ள இடிக்குது, பல்லுக்குள்ள வலிக்குது, வயிற்றுக்குள்ள பொருமுது என்ற மாதிரி ஒரே பிலாக்கணம்தான்.

வருகின்றவர்களும் ஏதோ நோயாளிகளின் மனம் நோகக் கூடாது என்ற மாதிரி 'ஆ.. அப்படியா? உங்கட நிலைமை விளங்குது. எதுக்கும் நாங்கள் இலங்கை அரசிடம் (மருத்துவரிடம்) சொல்கிறோம். அல்லது உங்கட பிரச்சினையைப் பற்றிக் கதைக்கிறோம்' என்று சொல்லி விட்டுப் போவார்கள்.

இப்படியே வெளியாரைக் கண்டதும் புலம்புவதும் ஒப்பாரி வைப்பதும் அவர்கள் வாக்குறுதிகளை அள்ளி வழங்குவதும் என ஒரு பெரிய சரித்திரமே இருக்கிறது.

ஆனால், ஒரு அங்குலம் கூட தமிழ் மக்களின் பிரச்சினை தீர்வை நோக்கி இதுவரை நகர்ந்ததில்லை.

ஆனாலும் நம்மவர்கள் முயற்சியை விடுவதில்லை. வெளியில் இருந்து யார் வந்தாலும் அவர்களின் காலடியில் விழ வேண்டியதுதான்.

இந்த அடிமைப் பழக்கத்தைப் பழக்கியதில் பெரும்பங்கு தமிழ்த்தேசிய அரசியல்வாதிகளுக்கும் கிறிஸ்தவ மதகுருக்களில் சிலருக்கும் உண்டு.

அவர்கள் எப்போதும் இலங்கையில் உள்ள அரசியற் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் சிங்கள, முஸ்லிம் மக்களையும் நம்புவதில்லை.

அவர்களுடன் கதைப்பதும் இல்லை.

ஆனால், வெளியில் இருந்து வரும் எந்தப் பேயிடமும் பிசாசிடமும் புலம்பத் தயார்.

இந்தப் பேய்களும் பிசாசுகளும்தான் எங்கள் போராட்டத்தை அழித்தது மட்டுமல்ல, இலங்கையை இரத்தக்களரியாக்கியதும், உலகத்தைக் கலக்கியடித்துக்கொண்டிருப்பதும் கூட.

கடைசியாக வந்தது பிரிட்டிஸ் பிரதமர். இவர்களே இலங்கைத்தீவை ஒன்றாகக் கட்டி வைத்து விட்டுப்போனவர்கள். இருக்கும் வரையும் எங்கள் முன்னோர்களைப் பாடாய்ப்படுத்தி விட்டு, பலவந்தமாக இலங்கைச் சமூகங்களை ஒன்றிணைத்து விட்டுப்போனவர்கள்.

ஒருவருக்கொருவர் இருந்து அடிபடவும் ஏதுக்களைச் செய்துவிட்டுப் போனவர்கள்.

எல்லாம் தங்கள் வசதிக்குத் தோதாகத்தான்.

இப்பொழுது இவர்களிடமும் நாங்கள் முறையிடுகிறோம்.

வயிற்றில் வலி என்றால் காலுக்குக் கட்டுப்போடுவதால் புண்ணியம் இல்லை.

செய்கிற மருத்துவத்தைச் செய்கிற இடத்தில், மருத்துவம் செய்யக் கூடிய ஆளிடம் செய்வதே சிறப்பு.

இல்லையென்றால் தப்பாமல் வரும் இறப்பு.

முன்னேறும் சந்தர்ப்பங்கள் தாமாக வருவதில்லை; அவை உருவாக்கப்படுகின்றன. - ஆரிஸன் ஸ்லவெட்மார்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## இணக்கத்திற்கு வேண்டிய இயல்பு!

நாம் சரி என்று நம்பிக் கொண்டிருப்பவை மட்டுமே சரியா? அல்லது வேறு சரிகளும் இருக்கலாம் என்பதை தெரிந்திருக்கிறோமா? நாம் சரி என்று கருதுவது இன்னொருவருக்கு தவறாகப் படலாம் என்பதும், அவர் சரி என்று கருதுவது நமக்குத் தவறாகத் தெரிவதையும் நாம் அனுபவத்தில் உணர்ந்திருக்கிறோம் அல்லவா!

இந்த சரி, தவறு என்பவைகளை பெரும்பான்மை சிறுபான்மைக் கணக்கெடுப்பில் ஜனநாயக ரீதியாகக் கூடத் தீர்மானித்துவிட முடியாது என்றும் அறிவோம். பூமி தட்டையானது என்றும், சூரியனே பூமியைச் சுற்றுகிறது என்றும் ஜனநாயகப் பெரும்பான்மையோடு நம்பிய காலம் இருந்ததை அறிவோமல்லவா!

இப்போது கூட ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் வேறு வேறு சரிகள் இருப்பதையும், அமெரிக்காவுக்கும் அல்கொய்தாவுக்கும் வேறு வேறு நியாயங்கள் இருப்பதையும் அவர்களில் ஒவ்வொரு தரப்புக்கும் உலகம் முழுவதிலும் கணிசமானளவு மக்கள் பேராதரவு இருக்கிறது என்பதும் நமக்குத் தெரியுமல்லவா!

நாயகன் திரைப்படத்தில், வேலு நாயக்கர் தன்னிச்சையாக நியாயத்தைக் கையிலெடுத்துக் கொலைகள் செய்வதைத் தவறென்று உணர்த்த அவரது மகள், நாயக்கரின் தோழரான பெரியவருக்கு கன்னத்தில் அறைவாள். அவர் தன் கண்முன்னால் செய்த கொலை தனக்குத் தவறாகத் தெரிவதால் தானும் அவருக்குத் தண்டனை கொடுக்கலாமல்லவா என்கிறாள். நாயக்கர் கோபப்பட்டு அவளை அடிக்கக் கை ஓங்குகிறார். "நான் சரி என்று நினைத்துச் செய்தது உங்களுக்குத் தப்பாகத் தெரிகிறதல்லவா அப்பா" என்று அவருக்கு உணர்த்துகிறாள் மகள்.

இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எல்லாத் தரப்பும் எல்லா மனிதர்களும் தாம் சரியானவர்கள் என்றே நம்பிக்கை கொண்டுள்ளனர். அதனால், நாம் மட்டுமே சரி நம்மிடம் மட்டுமே சரி இருக்கிறது என்று முறுக்கிக் கொண்டு நிற்பது ஒரு போதும் பிரச்சினை தீரப் போதுமானதில்லை.

மற்றவர்களின் சரி என்ன என்பது பற்றிய கவனிப்பும் கணிப்பும் நமக்கு வேண்டியிருக்கிறது. வெறுமனே குறை கண்டுபிடிக்கும் வாதங்களினால் வாழ்க்கையை சீர்செய்து கொள்ள முடியாது என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

ஒவ்வொருவரும் தாம் கண்ட ஒளியில் செல்வதையே விரும்புவர். அதையே சரி என்றும் மனப்பூர்வமாக நம்புவர். இதைத் தெரிந்து கொண்டாலே – அவர்களையும் புரிந்து கொண்டாலே நமக்கு அவர்களுடன் உரையாடலைத் தொடர முடியும். நமது சரியே ஒரே சரி என்ற எண்ணமே மற்றவரோடு உரையாட முடியாத நிலையில் நம்மை நிறுத்துகிறது.

நம் தவறுகளைக் கண்டுகொள்ள மறுத்து மற்றவர் தவறுகளுக்காய் முறுக்கிக்கொண்டு நேராய் நிற்பதில் நாம் பெருமைப்பட முடியாது. அப்படி நிற்பவர்களிடமும், நாம் தணிந்து அவர்களையும் தளர்த்தி வழிக்குக் கொண்டுவர முயல்வதில் இழிவெதுவுமில்லை. பலருக்குமான வாழ்வைச் செய்துதரும் மேன்மைச் செயலே அது.

மக்களிடமும் மனிதத்திடமும் நாம் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் எவரிடமும் பேச நமக்குத் தடை இல்லை. எல்லாத் தரப்புடனும் எல்லாச் சமூகங்களுடனும் நாம் பேச முடியும்.

நம்மிடம் மட்டுமே முழுச் சரியும் இருப்பதாக நினைத்துக் கொள்வதால்தான் இணக்கத்தைப் புறந்தள்ளும் இறுமாப்பு வெல்கிறது. வாழ்வு தோற்றுப் போகிறது.

- ஆசிரியர்.

# ஜனாதிபதியின் பிறந்த தினத்தில் 112 படையினருக்கு வீடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினமான நேற்று முன்தினம் முப்படை வீரர்களுக்கு 112 வீடுகள் ஜனாதிபதியினால் கையளிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு ஹோமாகம பிடிபன மகா வித்தியாலய விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்விற்கு வருகை தந்த ஜனாதிபதி, படைவீரர் ஒருவருக்கு உத்தியோகபூர்வமாக வீடொன்றைக் கையளித்து அதற்கான பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அமைச்சர்கள் விமல் வீரவன்ச, சுசில் பிரேமஜயந்த, ஏ.எச்.எம். பௌஸி, பந்துல குணவர்தன, தினேஷ் குணவர்தன உட்பட அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ உட்பட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் முப்படையைச் சேர்ந்த உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் 112 படையினருக்கு வீடுகளின் திறப்புகளை ஜனாதிபதி கையளித்துள்ளார்.

இந்த வீடுகள் படையினருக்கான 'நமக்காக நாம்' நிதியத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது வீடு நேற்றுமுன்தினம் ஜனாதிபதியினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு வீட்டுரிமையாளருக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் 'நமக்காக நாம்' நிதியம் மூலம் இதுவரை வடக்கு, கிழக்கு உட்பட 17 மாவட்டங்களில் படையினருக்கு வீடுகள் நிர்மாணித்து வழங்கப்பட்டுள்ளன.

படையினரின் வீட்டுத் திறப்புடன் சமையல் உபகரணங்கள் பிள்ளைகளுக்கான கல்வி உபகரணங்களும் ஜனாதிபதியால் வழங்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க உட்பட முக்கியஸ்தர்கள், மதத் தலைவர்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் குழப்பம் குறித்து கிழக்கு மாகாணசபையில் பிரேரணை

(கொழும்பு)

நிந்தவூர் பிரதேசத்தில் தோன்றியுள்ள அசாதாரண சூழ்நிலை தொடர்பாக கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் சபையின் முஸ்லிம் காங்கிரஸ் குழுத் தலைவருமான ஏ.எம்.ஜெமீல், அவசர பிரேரணை ஒன்றை சபையில் சமர்ப்பித்துள்ளார்.

நேற்றுக் காலை 10.00 மணியளவில் தவிசாளர் ஆரியபதி கலப்பதி தலைமையில் ஆரம்பமாகிய கிழக்கு மாகாண சபையின் மாதாந்த சபை அமர்விலேயே அவர் இந்த அவசர பிரேரணையை சமர்ப்பித்துள்ளார்.

கடந்த இரண்டு வார காலமாக நிந்தவூர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த கொள்ளை மற்றும் அச்சுறுத்தல் சம்பவங்களுடன் தொடர்புடைய மர்ம நபர்களை ஞாயிற்றுக்கிழமை இரவு பொதுமக்கள் மடக்கிப் பிடித்த போதிலும் அவர்களை விசேட அதிரடிப் படையினர் காப்பாற்றிக் கொண்டு சென்ற சம்பவத்தைக் கண்டித்துள்ள மு.கா.குழுத் தலைவர் ஏ.எம்.ஜெமீல், இது தொடர்பில் பக்கச்சார்பற்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை இரவு மர்ம நபர்கள் விடயத்தில் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் விசேட அதிரடிப் படையினர் ஒருதலைப் பட்சமாக மேற்கொண்ட மிகவும் மூர்க்கத்தனமான நடவடிக்கை காரணமாகவே நிந்தவூரில் குழப்பகரமான நிலை தோன்றியுள்ளது. இந்நிலை ஏனைய ஊர்களுக்கு பரவக் கூடிய வாய்ப்பு உள்ளது.

இது விடயத்தில் அரசாங்கமும் பாதுகாப்புத் துறையும் நீதியாக செயற்பட்டு சம்மந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி உரிய தண்டனை வழங்க அவசர நடவடிக்கை எடுப்பதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறாத வகையில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும் என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

# சவுதியிலுள்ள 1500 இலங்கையரை உடனடியாக அழைத்துவர ஏற்பாடு

பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்த நிலையில் சவுதி அரேபியாவில் சட்டவிரோதமாக தங்கியிருக்கும் இலங்கை பணியாளர்களை உடனடியாக நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் சவுதி அரேபியாவில் தங்கியிருக்கும் வெளிநாட்டு பணியாளர்கள் அந்நாட்டை விட்டு வெளியேறுவதற்காக கடந்த 3ஆம் திகதி வரை பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அந்தக் காலப் பகுதிக்குள் சவுதியை விட்டு வெளியேறாது தொடர்ந்தும் சட்ட விரோதமாக அங்கு தங்கியிருப்பவர்களை கைது செய்து சிறைத் தண்டனை வழங்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

எவ்வாறாயினும் குறித்த பொது மன்னிப்புக் காலப்பகுதிக்குள் 1500 இலங்கை பிரஜைகள் நாடு திரும்பவில்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்கள் சவுதி அரேபியாவிலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தின் கீழ் தங்கியிருப்பதாகவும் அவர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

# பொதுபலசேனாவிடம் மன்னிப்புக் கோரியது ஐ.தே.க.

(கொழும்பு)

பொதுபலசேனா அமைப்பிடம் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி மன்னிப்பு கோரியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவிற்கு முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தத்தே ஞானசேகரதேரர், ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நுகேகொடை நாலந்தாராமதிபதி நீத்தியாவல பாலித்த தேரரை நேற்று சந்தித்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் அதன் தேசிய அமைப்பாளர் தயாகமகே, நாடாளுமன்ற உறுப்பி'னர்களான ரவி கருணாநாயக்க, ருவான் விஜயவர் தன ஆகியோரும் சென்றிருந்தனர்.

தேரர்கள் மீது தாக்குதல் நடத்தியது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி மன்னிப்புக் கோர வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தத்தே ஞானசேகர தேரர் கோரி நின்றார். ஞானசேகர தேரர் உள்ளிட்ட பொதுபலசேனா ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவிற்கு அழைப்பதாக தெரிவித்த தேசிய அமைப்பாளர் தயா கமகே இந்தச் சம்பவம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி சகலரிடமும் மன்னிப்புக், கோருவதாக தெரிவித்தார்.

# குறுஞ்செய்தி அனுப்பிய நிறுவனத்திற்கு 10ஆயிரம் ரூபா இழப்பீடு செலுத்த உத்தரவு

செல்லிடப்பேசி குறுஞ் செய்தியினால் ஒருவருக்கு மன அழுதத்தை கொடுத்தமை தொடர்பில் 10 ஆயிரம் ரூபாவை இழப்பீடாக செலுத்துமாறு கல்கிஸ்சை மேலதிக நீதவான் பிரபர்ஷா ரணசிங்க நிறுவனம் ஒன்றுக்கு உத்தரவிட்டுள்ளார்.

சந்திரசேகர விஜேதிலக்க என்ற நபர் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார். தனது செல்லிடப், பேசிக்கு அனுப்பப்பட்ட குறுஞ்செய்தியால் தனக்கு மன அழுத்தம் ஏற்பட்டதாக முறைப்பாட்டில் அவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து அந்த குறுஞ் செய்தி அனுப்பப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நிறுவனம் ஒன்று பெண்களுக்கு ஏற்படும் சித்திரவதைகள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நோக்கில் அதனை அனுப்பியிருந்தமை தெரியவந்தது.

வெள்ளவத்தை பொலிஸார் அந்த நிறுவனத்திற்கு எதிராக கல்கிஸ்சை நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதவான், முறைபாட்டாளருக்கு மன அழுத்தம் ஏற்பட்டுள்ளதாக தீர்மானித்ததுடன் அதற்கான இழப்பீடாக 10 ஆயிரம் ரூபாவை செலுத்துமாறு உத்தரவிட்டார்.

# தமிழக மீனவ உறவுகள் அறங்காக்க வேண்டும்!

## பிறத்தியாள்

"இழுவைப்படகு, இரட்டைமடி மீன்பிடி போன்றவற்றை நிறுத்தும்படி இலங்கை மீனவர்கள் சொல்கிறார்கள்.

அது இந்தியாவில் நிறுத்தப்பட வில்லை, நாட்டுக்கு நாடு கடல் சட்டங்கள் வேறு வேறானவை.

இலங்கையைப் பொறுத்தவரை, இலங்கையில் கடலட்டைத் தடைச் சட்டம் இல்லை. ஆனால் இழுவைப்படகு, இரட்டைமடி தடைச் சட்டம்தான் இருக்கிறது.


கடலட்டைத் தடைச் சட்டம் இந்தியாவில் கொண்டுவரக் காரணம் கடலில் காணக்கூடிய அபூர்வமான உயிரினம்"

இது எப்படி இருக்கிறதென்றால் குடியிருக்கும் வீட்டைப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்துவார்களாம் ஆனால் வீட்டு வளையில் இருக்கும் குருவிக் கூட்டுக்குப் பாதுகாப்புச் சட்டம் போடுவார்களாம். கடலட்டை என்ற உயிரினம் எப்படி இனப்பெருக்கம் செய்கிறது, அபிவிருத்தியாகிறது என்ற அடிப்படை அறிவுகூட இல்லாதவர்களின் கடல்வள ஆராய்ச்சி அறிவை என்னவென்பது....?

1968ஆம் ஆண்டு இறுதியிலும் 70களின் தொடக்கத்திலும் யாழ். தீவகத்தில் கடலட்டைத் தொழில் அறிமுகமாகி ஏற்றுமதி செய்யத் தொடங்கியபோது அங்கொன்று இங்கொன்றாய் அருந்தலாகக் காணப்பட்ட கடலட்டைகள் அதற்குப் பிற்பாடுதான் அதிகளவில் பல்கிப் பெருகி பாரிய அபிவிருத்தி அடைந்தது. தொழிலாளர்கள் கடலட்டையை எவ்வளவுக்கெவ்வளவு பிடித்தார்களோ அவ்வளவுக்கவ்வளவு பல நூறு மடங்காகப் பெருகியது.

காரணம் என்னவெனின் ஏற்றுமதிக்காக இலங்கையில் பிடிக்கப்படும் கடலட்டை echinodermata இனத்தைச் சேர்ந்தாலும் அதன் இனப்பெருக்க முறைமை வேறானது.. ஒரு கடலட்டை வளர்ந்து முற்றி மரணிக்கும் காலத்தில் வயிற்றுப்பாகம் பிரிந்து அதனுள் குடலோடு இருக்கும் உயிரணுக் காவியான சினைநண்டு வெளியேறி இனப்பெருக்கத்துக்கான ஆயிரக்கணக்கான முட்டைகளை, அறுகு, கோரை, தாழை தாவரங்களிலும், சாட்டாமாறு, பூமுருக்கை, பவளப்பாறை போன்றவற்றிலும் படர விடும்.

இலங்கையில் கடலட்டை பிடிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து கடலட்டையின் இனப்பெருக்கமும், அபிவிருத்தியும் பலமடங்காகக் காரணம் தொழிலாளிகள் அட்டையைப் பிடித்துக் கொண்டு வரும் போதோ, அல்லது தோணியில் அவற்றை போடும்போதோ கடலட்டைகள் தன்னியல்பாகவே தமது குடலை முழுவதுமாக வெளியேற்றிவிடும். அதனோடு சேர்ந்து உயிரணுக்காவியான சினை நண்டும் வெளியேறிவிடும். தொழிலாளிகள் உடனுக்குடன் அவ்வற்றை மீண்டும் கடலில் எறிந்து விடுவார்கள். (அட்டை இனப் பெருக்கத்தின் அக்கறையின் மீது அவர்கள் எறிவதல்ல, கழிவு என்றும், தோணிகள் பாரமாகி விடும் என்றும்தான். பின்னைய காலங்களில் உண்மையை அறிந்து அட்டைக் குடல், உயிரணுக்காவி சினைநண்டு போன்றவற்றைக் கரைக்குக் கொண்டு வராமல் அந்தந்த உடனேயே கடலில் போட்டு விடுவார்கள்)



1985ம் ஆண்டு நெடுந்தீவுக்கும் கச்சத்தீவுக்கும் இடையில் சுட்டுக்கொல்லப்பட்டு, தீவகக் கடற்பரப்புக்குள் கண்டெடுக்கப்பட்ட 9 தமிழக மீனவர்களின் உடல்களை வேலணை தெற்குத் துறைமுகத்தில் அடக்கம் செய்து, கொல்லப்பட்டவர்களின் பெயராலேயே தீவக மீனவமக்களால் கட்டப்பட்ட நினைவுக் கல்.

தவிரவும் அட்டைகுளிகாரர் வளர்ந்த அட்டைகளை மட்டுமே குளித்தார்கள். அட்டையின் அளவுகள் 7வகையாகப் பிரிக்கப்பட்டு, அந்த அளவுகள் மட்டுமே பிடிக்கப்பட்டன. அட்டைக்குஞ்சுகளை மிகப் பக்குவமாகத் தவிர்த்து வருவார்கள். கோழிக்குஞ்சுகளைப் பருந்திடமிருந்து காப்பதுபோல் அட்டைக் குஞ்சுகள் கூடுகளில் அகப்பட்டால்கூட மிக்க் கவனமாக அதனை மீண்டும் கடலில் விட்டு விடுவார்கள். சுழியோடத் தெரியாத சில தொழிலாளிகள் களக்கடலிலிருந்து குஞ்சுஅட்டைகளைப் பிடித்தபோது பெரும் கலவரமே உருவான கதைகளும், தடுத்த சம்பவங்களும் உண்டு. சுழியோடத் தெரியாத ஒருசில தொழிலாளிகள் மண்டாவைப் பயன்படுத்தித் தோணியில் நின்றவாறே அட்டையைக் குத்திப் பிடிக்கும் முறைகளும் அறிமுகமாகிப் பரவலானது.

இப்படி நீண்டகாலம் உயிர்வாழ்ந்து மடியும்போதே இனவிருத்தியைச் செய்துவந்த கடலட்டை, தொழிலாளிகளின் இந்த தொழில்முறையால் பலநூறு மடங்காகப் பெருகத் தொடங்கியது. 69, 70களில் ஒரு100, 150 அட்டைகளோடு கரை வந்த தோணிகள் 75களில் ஆயிரம், 1500 என பத்துமடங்கு அதிகமாகத் தோணி நிரப்பிக் கரை வந்தன. அந்தளவுக்கு கடலட்டைகளின் இனப்பெருக்கம் அதிகரித்து வந்தன. யாழ். தீவகப் பரவைக் கடலிலிருந்து பள்ளிக்குடா, வலைப்பாடு, எருக்கலம்பிட்டி, குமுழமுனை, இரணைதீவு, நாச்சிக்குடா, மன்னார், அரிப்புத்துறை, சிலாபத்துறை, குதிரைமலை, பளுக்காத்துறை, புத்தளம் என அட்டைத் தொழில் பரவியதால் மேற்கூறிய அத்தனை கடல்களிலும் கடலட்டை வியாபித்துப் பெருக்க மடைந்தது. 78, 80ஆம் ஆண்டுகளில் எதை எடுப்பது எதை விடுவது என்று தெரியாமல் கடற்பரப்பெங்கும் விளைந்து சிந்திக் கிடந்தது கடலட்டை.

உண்மையில் கடலட்டையின் அழிவு ஆரம்பமானது ட்ரோலர்களின் வருகையின் பின்புதான். ட்ரோலர்கள் அட்டைகளை மட்டும் அழிக்கவில்லை, அதனோடு சேர்த்து உயிரணுக்காவி ஆகப்பட்ட சினை நண்டுகளையும் பூண்டோடு கொன்றது. கடலட்டையின் சினைகளும் முட்டைகளும் தங்கிப் பொரிக்கக்கூடிய கடற்தாவரங்களையும், சாட்டாமாறுகளையும், சிறுமுருகைக் கற்களையும், பவளப் பாறைகளையும் மண்ணோடு மண்ணாக்கின.

இந்தியாவும் தமிழகமும் கடலட்டையைக் காபந்து பண்ணத் தடுக்க வேண்டியதை விட்டுவிட்டு, செய்யக் கூடாத காரியத்தைச் செய்கிறார்கள். இது ஒருவகையில் சந்தேகங்களையும் எழுப்புகிறது.

இந்தியாவில் அறிமுகப்படுத்தப் படாத, அல்லது அருந்தலாக இருக்கக்கூடிய கடலட்டைத் தொழிலால் இலங்கைக்கு வருடாவருடம் பலகோடி சிங்கப்பூர் வெள்ளிகளை ஈட்டிக் கொடுப்பதைச் சகிக்க முடியாமல் இருக்கலாம். தவிரவும் ட்ரோலர், இரட்டைமடித் தொழில்கள் மீனைப் பிரதானமாகக் கொண்டதல்ல. இறால்தான் அதன் முக்கிய வருமானமாகும். வெளி நாடுகளுக்கு இறால் ஏற்றுமதி செய்வதால் கிடைக்கக் கூடிய வருமானமே இந்திய தமிழக அரசுக்கு உகந்ததாகும். இலங்கைக் கடல்வளம் பாதிக்கப்படுவது பற்றிய கரிசனை அவர்களுக்குத் தேவையற்றது.

ட்ரோலர் அறிமுகமாவதற்கு முன்னால் இரு கரை மீனவர்களும் வழிவலைத் தொழிலையே (GillNet) செய்து வந்தார்கள். இதனால் யாருக்கும் எந்தப் பாதகமுமில்லை. கடற்தாயின் ஒரே வயிற்றுப் பிள்ளைகளாக, தாங்கள் தாங்கள் எடுத்துவரும் கட்டுச்சோற்றை தங்கி நிற்கும் தீவுகளான கச்சைதீவு, கக்கடதீவு, நெடுந்தீவு, இரணைதீவு போன்ற இடங்களில் பகிர்ந்துண்டார்கள். அவ்வாறே கடல்படு திரவியங்களையும் பகிர்ந்து பிடித்துக் கொண்டார்கள். நாசமறுத்த ட்ரோலர் அறிமுகமானதும் அந்நிய நாடுகளின் கரன்ஸி வருமானத்துக்காகத் தமிழகக் கடற்பரப்புக்களையும் கட்டாந்தரையாக்கி விட்டார்கள். எஞ்சியிருக்கும் யாழ். தீவகக் கடற் பரப்புக்களும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டுக் கட்டாந்தரையாகும் நிலைக்குப் போய்விட்டது. (இந்த இழுவைப் படகுகளால் கடலட்டை மட்டுமல்ல, இன்னும் பல அரிதான உயிரினங்கள் முற்றாக அழிந்துவிட்டன. தாழை கடியன் பாம்புகள், குட்டூறு, கடற்குதிரை, தாமரை கத்தான். உறுமீனினம் போன்றவை முற்றாக அழிக்கப்பட்டுவிட்டன.)


கடல் இயற்கை வளங்களுக்குப் பாதகமில்லாமல் இப்போதுகூட இருகரை மீனவர்களும் வழிவலைத் தொழிலைத் தாராளமாகவே செய்ய முடியும். ஆனால் வழிவலைத் தொழிலில் இறால் பிடிக்க வாய்ப்பில்லை. மீன் மட்டுமே. மீன்களை அதிகளவில் உள்ளூர் மக்களுக்குத்தான் விற்க முடியும். உள்நாட்டு மக்களுக்கெல்லாம் மீன் எதற்கு...? வெளிநாடுகளின் அந்நியக் கரன்ஸிகளால் அரசியல்வாதிகளின் கல்லா நிறைந்தால் போதும்தானே.

தவிரவும் இந்திய மத்திய அரசும், தமிழக மாநில அரசும் தமிழக மீனவர்களுக்கு மானியங்களை வழங்கி தென்கடற் பரப்புக்குள் ஆழ்கடல் மீன்பிடிக்கு ஒத்தாசையும், அபிவிருத்தியும் செய்ய முடியும். ஏகப்பெருவெளியாய் பரந்த கடலும், விளைந்த மீனும் பிடிப்பாரற்றுக் கிடக்கிறது. உலகச் சந்தையில் மிக முக்கிய இடத்திலிருக்கும் சூரை மீன்பிடியைச் செய்யக்கூடிய ஏகப்பட்ட வளங்கள் கூட தென் கடலில் உண்டு.

இலங்கைக் கடற்படையால் கடலில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக உறவுகளின் சடலங்களை மீட்டெடுத்துத் தமது கரையிலேயே தகனம் செய்து, நினைவுத் தூண்களும் எழுப்பிய தீவக மீனவர்கள் இன்று வயிறெரிந்து, பட்டினியால் நொந்து சாகிறார்கள். ஆனால் இதுவரை தமிழக மீனவர்களையோ, பெருமுதலாளிகளின் இழுவைப் படகில் கூலியாக வரும் தொழிலாளிகளையோ மனம் நொந்து திட்டவில்லை. கடலில் பயணம் செய்பவனை அவர்கள் திட்ட மாட்டார்கள். ஆனால் இதே நிலையில்தான் தொடர்ந்தும் இருப்பார்கள் என்றும் சொல்ல முடியாது. தங்களது குழந்தை குட்டிகள் இந்தக் கடற் கொள்ளையால் பட்டினியாகக் கிடந்து சாகிறார்கள் என்றால் பெற்ற வயிறுகள் எத்தனைதூரம்தான் பொறுத்தருளும்.....?

பொன்முட்டையிடும் வாத்துக்கதையை நூற்றாண்டுகளுக்கு மேலாக, சந்ததி சந்ததியாகக் கேட்டுத்தானே வளர்ந்தோம் உறவுகளே! அதுதான் இது என்பதைச் சற்றுப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள்.

**கடலட்டையின் அழிவு ஆரம்பமானது ட்ரோலர்களின் வருகையின் பின்புதான். ட்ரோலர்கள் அட்டைகளை மட்டும் அழிக்கவில்லை, அதனோடு சேர்த்து உயிரணுக்காவி ஆகப்பட்ட சினை நண்டுகளையும் பூண்டோடு கொன்றது. கடலட்டையின் சினைகளும் முட்டைகளும் தங்கிப் பொரிக்கக்கூடிய கடற்தாவரங்களையும், சாட்டாமாறுகளையும், சிறுமுருகைக் கற்களையும், பவளப் பாறைகளையும் மண்ணோடு மண்ணாக்கின. இந்தியாவும் தமிழகமும் கடலட்டையைக் காபந்து பண்ணத் தடுக்க வேண்டியதை விட்டுவிட்டு, செய்யக்கூடாத காரியத்தைச் செய்கிறார்கள்.**





# வரவு செலவுத் திட்டம் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நாளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2014 நிதியாண்டிற்கான செலவினங்களுக்கு 154,252 கோடி 25 இலட்சத்து 18 ஆயிரம் ரூபாவை ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் கடந்த ஒக்ரோபர் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் நாளை பிற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது. 22 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நடைபெறும்.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு அன்று மாலை இடம்பெறவுள்ளது. குழு நிலை விவாதங்கள் டிசம்பர் 2 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதோடு அன்று மாலை வரவு செலவுத் திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு நடத்த ஏற்பாடாகியுள்ளது.

வரவு செலவுத் திட்டம் ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதையொட்டி நாடாளுமன்றத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் போக்கு வரத்து ஒழுங்குகளும் செய்யப் பட்டுள்ளன.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தனது 68 ஆவது பிறந்த தினத்தை நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ, மகன்களான நாமல், யோஷித மற்றும் ரோகித ஆகியோருடன் கொண்டாடுவதைக் காணலாம்.

# 3 சீனப் பிரஜைகளுக்கு 4 வருடங்கள் சிறை

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியிலுள்ள தனியார் வங்கியொன்றின் தன்னியக்க இயந்திரத்தின் தரவுகளை களவெடுத்தார்கள் எனறு குற்றஞ்சாட்டப்பட்ட சீனப்பிரஜைகள் மூவருக்கு நான்கு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.


கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன் தலா 8 இலட்சம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆஜர்படுத்தப்பட்டபோதே நீதிபதி ப்ரிதி பத்மன் சுரசேன மேற்கண்டவாறு தீர்ப்பளித்தார்.

இதேவேளை, அந்த மூவரில் இருவர் போலி கடனட்டையை வைத்திருந்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டமையினால் அவ்விருவருக்கும் ஏற்கெனவே வழங்கப்பட்ட தண்டனை மற்றும் தண்டத்திற்கு மேலதிகமாக ஒருவருட சிறைத் தண்டனையும் (கடும் வேலைகளுடன் கூடியது) தலா மூன்று இலட்சம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் உபகரணங்களை பாவித்து வங்கியின் தன்னியக்க இயந்திரத்திலிருந்து தரவுகளை களவெடுக்க முயன்றதாக அவர்கள் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுகளை அம்மூவரும் ஏற்றுக் கொண்டதையடுத்தே மேற்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

# மாணிக்க கங்கைக்குள் முதலைகள் கதிர்காம யாத்திரிகர்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

கதிர்காமம் மாணிக்க கங்கைக்குள் பெருமளவு முதலைகள் வந்துள்ளதால் பக்தர்கள் ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களில் நீராடுவதனை தவிர்த்துக் கொள்ளுமாறு கதிர்காமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

கதிர்காமம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் தொடர்ச்சியாக பெய்து வரும் அடைமழையினால் யாஎல காட்டுக்குள்ளிருந்து பெருமளவு முதலைகள் மாணிக்க கங்கைக்குள் ஊடுருவியுள்ளன.

இவை ஆள் நடமாட்டமில்லாத பகுதிகளில் பதுங்கியிருந்து மனிதர்களை தாக்கக் கூடியவை.

கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இதேபோன்றதொரு சந்தர்ப்பத்தில் மாணிக்க கங்கை கரையில் குழந்தையை அமர வைத்துவிட்டு தாய் துணி துவைத்துக் கொண்டிருந்த போது முதலை குழந்தையை நீருக்குள் இழுத்துச் சென்று கொன்றது.

இதேபோன்று ஹோரணையிலிருந்து கதிர்காமத்திற்கு வந்த பக்தர் குழுவைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் முதலையினால் இழுத்துச் செல்லப்பட்டார். ஏனையோர் எடுத்த முயற்சியின் காரணமாக இளைஞன் காப்பாற்றப்பட்ட போதும், முதலை அவரது வலது கையுடன் ஆற்றுக்குள் மறைந்து விட்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மழைகாலத்தில் சிறிய அருவிகளுக்கூடாக முதலைகள் மாணிக்க கங்கைக்கு வருவது வழமையே என்றும், முதலைகள் உண்ணக் கூடிய மீன் வகைகள் மாணிக்க கங்கையில் இருப்பதே இதற்குக் காரணம் என்றும் ஊவா வலயத்துக்கான வன விலங்கு உதவிப் பணிப்பாளர் சிசிர டி சில்வா, தெரிவித்துள்ளார்.

# இரசாயன அனர்த்தங்களை தடுப்பது தொடர்பில் பயிற்சி

(கொழும்பு)

இரசாயனங்கள் மூலம் ஏற்படும் அனர்த்தங்களை தடுப்பதற்கான தேசிய திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்காக சர்வதேச நிபுணர்களின் பங்களிப்புடன், அதிகாரிகளுக்கு விசேட பயிற்சியளிக்கப்படவுள்ளதாக அதிகாரசபையின் தலைவர் விமல் ரூபசிங்க தெரிவித்தார்.

இரசாயனப் பொருட்களை பயன்படுத்தும் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பும், பயிற்சியும் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரசாயன பதார்த்த பாவனையின் போது ஏற்படும் அனர்த்தங்களைத் தடுப்பதற்கான புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு இந்தப் பயிற்சிகள் உதவியாக அமையும்.

இந்தத் திட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள அரச மற்றும் தனியார் இரசாயன தொழிற் சாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்களும், பணியாளர்களும் அவதானமாகவும், பாதுகாப்பாகவும் செயற்படுதல் மற்றும் இரசாயனங்களை கையாளுதல் தொடர்பில் பயிற்சிகளும் வழங்கப்படவுள்ளன.

தற்போதுள்ள இரசாயன பொருட்களால் ஏற்படும் விபத்துகளை குறைப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தப்படவுள்ளதாக விமல் ரூபசிங்க சுட்டிக்காட்டினார்.

# தரமான டீசல் இறக்குமதி

நிராகரிக்கப்பட்ட டீசலுக்குப் பதிலாக மேலும் ஒருதொகை எரிபொருளுடன் கப்பலொன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நாட்டை வந்தடையும் என எதிர்பார்ப்பதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவிக்கின்றது.

உரிய தரத்தினை கொண்டிராத காரணத்தினால் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒருதொகை எரிபொருளை நிராகரிப்பதற்கு நேற்றைய தினம் தீர்மானிக்கப்பட்டதாக கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த டி சில்வா குறிப்பிட்டார்.

சிங்கப்பூரிலிருந்து 40 ஆயிரம் மெட்ரிக் தொன் டீசல் இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டிருந்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


# இரு விமானப்படை வீரர்கள் துப்பாக்கிச் சூட்டில் பலி

(கொழும்பு)

பதுருதாலகால விமானபபடை முகாமில் சிப்பாய் ஒருவர் மற்றுமொரு சிப்பாயை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்து விட்டு தானும் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

நேற்று அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

பாதுகாப்புக் கடமையிலிருந்த சிப்பாய் மற்றுமொரு சிப்பாய் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி விட்டு அதே துப்பாக்கியில் தன்னையும் சுட்டுக் கொண்டுள்ளார்.



இதில் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மரண விசாரணை இன்று இடம்பெறவுள்ளது. தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

# தலைமைத்துவ பயிற்சியின் முதற்கட்டம் வார இறுதியில்

இம்முறை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சியின் முதற்கட்டம் எதிர்வரும் 24 திகதி ஆம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில், இந்த தலைமைத்துவ பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் ஷனிக்கா ஹிரிம்புரேகம தெரிவித்தார்.

இதற்குத் தகுதிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் இதுதொடர்பில் உயர்கல்வி அமைச்சின் ஊடாக அறிவிக்கப் பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்திற்கு தகுதிபெற்ற மாணவர்களுக்கு பொருத்தமான பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடநெறி என்பனவற்றை வகைப்படுத்தும் நடவடிக்கைகள் தற்போது இடம் பெறுவதாக பல்கலைக்கழக மானியங்க்ள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# 60 இலட்சம் ரூபா நிதி மோசடி; பௌத்த பிக்கு தலைமறைவு

(கொழும்பு)

அறுபது இலட்சம் ரூபா நிதி மோசடியில் ஈடுபட்ட பௌத்த பிக்கு ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

இந்தியாவிற்கு யாத்திரை அழைத்துச் செல்வதாகத் தெரிவித்து பௌத்த பிக்குகள் மற்றும் ஏனைய நபர்களிடம் பாரியளவில் பணம் சேகரிக்கப் பட்டுள்ளது.

மக்களை ஏமாற்றி குறித்த பௌத்த பிக்கு 60 இலட்ச ரூபா பணம் சேகரித்துள்ளார்.

அனுராதபுரம் சவாஸ்திபுர அதரஎல பிரதேச விஹாரை ஒன்றைச் சேர்ந்த பௌத்த பிக்குவே இவ்வாறு நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

பௌத்த பிக்குகள் மற்றும் மக்களிடம் தலா 30000 ரூபா முதல் பணம் திரட்டியுள்ளார்.

திரட்டிய பணத்தை வாகனக் குத்தகைக் கொடுப்பன விற்காக குறித்த பௌத்தபிக்கு செலுத்தியுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

பௌத்த பிக்கு தேடப்பட்டு வருவதாகவும், அனுராதபுர பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது

# ஐந்து சமுர்த்தி வங்கிகள் மன்னாரில் திறக்க ஏற்பாடு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில 5 புதிய சமுர்த்தி வங்கிகளை திறப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மன்னார் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.ஜே. ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

இம்மாவட்டத்திலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேலும் மேம்படுத்தும் பொருட்டே சமுர்த்தி வங்கிகள் திறந்துவைக்கப்படவுள்ளன. அத்துடன் இதற்கான கட்டடப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு ஆளணியினரும் தயார் நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்தார்.

மேலும் மன்னார் மாவட்டத்திலுள்ள 5 பிரதேச செயலகப் பிரிவிலும் தலா ஒவ்வொரு வங்கி நிர்மாணிக்கப்படும். அதன்படி மன்னார் பிரதேச செயலகப் பிரிவுக்கான வங்கி சிறுநாவற்குளத்திலும், மாந்தை பிரதேச செயலகப் பிரிவிற்கான வங்கி அடம்பனினும் மற்றும் முசலி, நானாட்டான், மடு ஆகிய பிரதேச செயலகப் பிரிவிற்கான வங்கிகள் அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு அருகிலும் நிர்மாணிக்கப்படுமெனவும் மேலும் நான்கு வங்கிகள் தேவை அதிகமுள்ள இடங்களிலும் அமைக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



யுத்தத்தினால் சேதமடைந்த நிலையில் இதுவரை புனரமைக்கப்படாத ஆனந்தபுரம் உபதபாலகம். (கே)

## வினைத்திறன் காண் பரீட்சைகள் திகதி விபரம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பின்வரும் பரீட்சைகள் எதிர்வரும் 23, 24ஆம் திகதிகளில் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது.

இதன்படி கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்களுக்கு உள்ளக விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை, இலங்கை பொது நூலகர் சேவை IIIஆம் வகுப்பு மற்றும் IIஆம் வகுப்பிலுள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை 2011(2013), சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தகைமைப் பரீட்சை ஆகியன எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேலும் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் வகுப்பு III இற்கு (பொது ஊழியர் கோப்பு/ விசேட ஊழியர் கோப்பு) சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (2012, 2013) எதிர்வரும் 24ஆம் திகதியும் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றுவோரில் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் மற்றும் மேலதிக விபரங்கள் தேவைபடும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப்பெயர், முகவரிகளுடன் இத்திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளையின் 011 2785230, 011 2177075 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## புறநெகும திட்டப்பொறியியலாளரை நீக்கவேண்டுமெனத் தீர்மானம்

(வேலணை)

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சின்னையா சிவராசா தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட கூட்டத்தில் வரவுசெலவுத் திட்டம் 1 ஆம் வாசிப்பு வாசிக் கப்பட்டது, அதனைத் தொடர்ந்து வேலணை பிரதேச சபையில் உலக வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் புறநெகுமத் திட்டத்தில் வேலணை பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு மாவட்டப் பொறியியலாளர் இடையூறு ஏற்படுத்துவதனால் குறித்த காலங்களில் அபிவிருத்தி வேலைகளை பூர்த்தி செய்து மக்கள் அதனூடாக பயனடைவது தடுக்கப்படுகின்றது எனவும் இதனால் மாவட்டப் பொறியியலாளர் ஸ்ரெஜிலதரனை அடுத்த வருடத்திலிருந்து இத்திட்டத்திலிருந்து நீக்கி மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணமுடைய அலுவலரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படியாக பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கு அவசர கடிதம் அனுப்புவது என தீர்மானிக்கப்பட்டதுடன் அவருக்கு எதிராக கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## உரிமை கோரப்படாத சான்றுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் 2012.12.28ஆம் திகதி கோப்பாய் பொலிஸாரால் உரிமை கோரப்படாத JVC இன் தொலைக்காட்சிப்பெட்டி மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த தொலைக்காட்சிப்பெட்டியை உரிமை கோருபவர்கள் நீதிமன்றத்திற்கு அலுவலக நேரங்களில் சமுகமளித்து அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறும், ஆறு மாதகாலத்திற்குள் குறித்த சான்றுப்பொருளை பெற்றுக்கொள்ளத் தவறும் பட்சத்தில் அரசுடமையாக்கப்படும் என நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார்.




# உலகக் கிண்ணக் கால்பந்து
# கமரூன் தகுதி



பிரேசிலில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிக்கு ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்த கமரூன் அணி தகுதி பெற்றுள்ளது.

கமரூனின் தலைநகர் ஜாவுண்டே நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தகுதிச் சுற்றுப் போட்டியில் கமரூன் அணியும், டுனீசியா அணியும் மோதின.

இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் 2-0 என்ற கோல் கணக்கில் கமரூன் அணி முன்னிலை பெற்றது. பிற்பாதியிலும் ஆதிக்கம் செலுத்திய கமரூன் அணி மேலும் 2 கோல் அடித்தது. கடுமையாகப் போராடிய டுனீசியா வீரர்களுக்குப் பலனாக ஒரு கோல் கிடைத்தது. இறுதியில் 4-1 என்ற கோல் கணக்கில் கமரூன் அணி வெற்றி பெற்றது. அந்த அணியைச் சேர்ந்த ஜீன் மகௌன் 2 கோல் அடித்து, இரசிகர்களை உற்சாக வெள்ளத்தில் மிதக்க வைத்தார். இந்த வெற்றியினால், கமரூன் அணி உலகக் கோப்பையில் விளையாடும் வாய்ப்பைப் பெற்றது. 7ஆவது முறையாக கமரூன் உலகக் கோப்பையில் விளையாடவுள்ளது குறிப்பிடத்தக்கது.



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட வடமாகாண வீர,வீராங்கனைகளுக்கான கராத்தேப் போட்டியில் பதக்கம் வென்ற கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட சி.எஸ்.டி. திணைக்கள வீர,வீராங்கனைகள் கடந்த வாரம் விசுவமடுவில் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் கண்காட்சி கராத்தேப் போட்டிகளும் இடம்பெற்றன. இதில் பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகள், பிரதம ஆசிரியர் சென்.சே விஜயராஜ் ஆகியோருடன் சி.எஸ்.டி. திணைக்கள அதிகாரிகளையும் காணலாம். (எஸ்.பி.)

# நான் அராஜகவாதியா?

(பிறிஸ்பேன்)



அவுஸ்ரேலிய ஊடகங்கள் என்னை அரஜாகவாதி என்று வர்ணித்துள்ளன. பொதுவாழ்வில் நான் அப்படிப்பட்டவன் கிடையாது. களத்தில் அவ்வாறு அரஜாகவாதி எனில் அதை ஏற்றுக் கொள்கின்றேன் என இங்கிலாந்து அணியின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி நாளை அவுஸ்ரேலியாவின் பிரிஸ்பேனில் ஆரம்பமாகவுள்ளது. இப்போட்டி இங்கிலாந்து அணியின் அதிரடி வீரர் கெவின் பீற்றர்சனுக்கு 100ஆவது ஆட்டமாகும். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாங்கள் இங்கு வெற்றிபெறவே வந்திருக்கிறோம் என்பதை அவுஸ்ரேலியர்கள் மறக்க வேண்டாம். என்னை அவுஸ்ரேலியஊடகங்கள் அராஜகவாதி என்று வர்ணித்துள்ளது. இவ்வாறு என்னை அராஜகமானவன் என்று சிலர் நினைப்பதை நான் ஒன்றும் செய்வதற்கில்லை. எல்லா விளையாட்டு வீரர்களிடத்தும் சிறந்ததை வெளியே கொண்டு வர இதுபோன்ற தன்மைகள் இருக்கவே செய்யும். ஆனால் நான் அதனை தன்னம்பிக்கை என்கிறேன். நீங்கள் அராஜகம் என்று கூறுகிறீர்கள்.

இங்கிலாந்து அணியில்... நல்ல ஒற்றுமை இருக்கிறது. குறிப்பாக அவுஸ்ரேலியாவை இங்கிலாந்தில் 3- 0 என்று வீழ்த்திய நம்பிக்கை இன்னும் உயிருடன் இருக்கிறது. தற்போது இங்கிலாந்து ஒரு சிறந்த அணியாகவே உள்ளது.

சில நல்ல இனிங்ஸ்களை ஆடியுள்ளேன், நான் இந்தப் பயணத்தை மகிழ்வுடன் அனுபவிக்கிறேன்,ஆனால் நிறையத் தவறுகளும் என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் இருக்கிறது. ஆனால் அவையனைத்தும் சிறப்பாகவே வெளி உலகிற்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

# கிண்ணத்தை வெல்லும் இலங்கை

## எண்ணத்தை சொல்கிறார் பயிற்றுநர்



அடுத்தாண்டு பங்களாதேஷில் இடம்பெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரை இலங்கை அணி கைப்பற்றுமென எதிர்பார்ப்பதாக இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரஹம் போர்ட் தெரிவித்துள்ளார்.

5ஆவது உலக ருவென்ரி-20, தொடர் அடுத்தாண்டு மார்ச் மாதத்தில் பங்களாதேஷில் இடம்பெறவுள்ளன. இலங்கை அணியின் தற்போதைய பயிற்றுவிப்பாளரான கிரஹம் போர்ட் எதிர்வரும் பெப்ரவரியுடன் தனது பதவியிலிருந்து விலகவுள்ளார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள அவர், உலக ருவென்ரி-20 தொடரைப் பொறுத்தவரை இலங்கைஅணிக்கு அற்புதமான வாய்ப்புக்கள் காணப்படுவதாகக் குறிப்பிட்டார். இலங்கை அணி தொடர்ச்சியாகச் சிறப்பான ருவென்ரி-20 கிரிக்கெட்டை வெளிப்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கை அணி உலக ருவென்ரி-20 தொடருக்காக இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, தகுதிபெறும் அணியொன்று ஆகியன அடங்கிய குழுவில் வகைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், இலங்கை அணி சாதகமான குழுவில் வகைப்படுத்தப்பட்டுள்ளதாக போர்ட் தெரிவித்தார்.

இலங்கை அணி உலக ருவென்ரி-20 தொடருக்கு முன்னதாக பங்களாதேஷிற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், அது மிகச்சிறந்த அனுகூலமாக அமையும் எனக் குறிப்பிட்ட கிரஹம் போர்ட், இலங்கை அணி உலக ருவென்ரி-20 கிண்ணத்தைக் கைப்பற்றுவதைத் தூரத்திலிருந்து பார்க்கும் எதிர்பார்ப்புடன் உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

# மே.தீவுகள் அணி அறிவிப்பு



நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம்மேற்கொள்ளவுள்ள மேற்கிந்தியத்தீவுகள் அணியின் டெஸ்ட் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இப்போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

அதன் விபரம் வருமாறு:

டரன் சமி, பெஸ்ற், டரன் பிராவோ, சந்தர்போல், கொட்டரெல், டியோ நரைன், எட்வேர்ட்ஸ், கிறிஸ் கெய்ல், வீரசமி பெருமாள், கொரான் பவல், டினேஷ் ராம்டின், ரோச், சாமுவேல்ஸ், ஸ்லிங்போர்ட், சட்விக் வோல்ற்றன்

# தென்னாபிரிக்காவுக்கு காத்திருக்கும் சவால்

(ஜோகனஸ்பேர்க்)

அடுத்து இடம்பெறவுள்ள இந்தியாவுக்கு எதிரான தொடரில் தான், சொந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்திவரும் தென்னாபிரிக்க அணிக்கு உண்மையான சவால் காத்திருக்கிறது என தென்னாபிரிக்க முன்னாள் கப்டன் கெப்லர் வெசல்ஸ் தெரிவித்தார்.

அடுத்த மாதம் தென்னாபிரிக்க சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. ஒருநாள் போட்டிகள் ஜோகனஸ்பர்க் (டிச., 5), டர்பன் (டிச., 8), செஞ்சுரியன் (டிச., 11) மைதானங்களில் இடம்பெறவுள்ளன. டெஸ்ட் போட்டிகள் ஜோகனஸ்பேர்க் (டிச.,18-22), டர்பனில் (டிச., 26-30) நடைபெறவுள்ளன. இத்தொடர் குறித்து தென்னாபிரிக்காவின் முன்னாள் கப்டன் கெப்லர் வெசல்ஸ் தெரிவிக்கையில்,இந்திய, தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான தொடரை எதிர்நோக்கி உள்ளேன். ஏனெனில் இத்தொடரில் தான் சொந்த மண்ணில் ஆதிக்கம் செலுத்தி வரும் தென்னாபிரிக்கஅணிக்கு உண்மையான சவால் காத்திருக்கிறது. இத்தொடர், இந்திய துடுப்பாட்ட வீரர்களுக்கும், தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களுக்கும் இடையிலான போட்டியாக அமையும். இத்தொடரின் போது தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்கள் நிறைய ஓட்டங்கள் சேர்ப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் தற்போதுள்ள இந்திய துடுப்பாட்ட வீரர்கள் தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களுக்கு நெருக்கடி கொடுப்பார்கள் என எதிர்பார்க்கிறேன். சமீபகாலமாக இந்திய அணியில் இடம்பெற்றுள்ள இளம் வீரர்கள் சிறப்பாக செயற்படுகின்றனர்.

இத்தொடருக்கான தென்னாபிரிக்க அணி தேர்வு கடினமானது. 15 பேர் கொண்ட அணி அறிவிப்பதில் எவ்வித பிரச்சினையும் இருக்காது. ஆனால் விளையாடும் 11 பேர் அணியை தேர்வு செய்வது சிக்கலானது. டெஸ்ட் போட்டியில் கலிஸ், ஸ்மித் விளையாடுவார்களாஎனத் தெரியவில்லை. ஒருவேளை இவர்கள் இடம்பெறும் பட்சத்தில், சில இளம் வீரர்களை வெளியேற்ற நேரிடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஒரு நாள் தொடர் நாளை ஆரம்பம்

(கொச்சி)

இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் முதல் ஆட்டம் நாளைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு கொச்சியில் நடைபெறவுள்ளது.

டெஸ்ட் தொடரில் படுதோல்வியடைந்த மேற்கிந்தியத்தீவுகள் அணி ஒரு நாள் தொடரை வெல்லும் முனைப்புடன் களமிறங்கும் என அதன் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, முதல் போட்டியில் 81 ஓட்டங்களை ஹோலி பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் ஒரு நாள் போட்டியில் விரைவாக ஐந்து ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வீரர் என்ற சிறப்பை மேற்கிந்தியத்தீவின் முன்னாள் கப்டன் விவியன் ரிச்சாட்டின் சாதனையை சமன் செய்ய முடியும்.

அத்துடன் தற்போது ஒரு நாள் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருக்கும் ஹோலி இத்தொடரில் சிறப்பாகச் செயற்பட்டால் மாத்திரமே அதனைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

இத்தொடரில் ஹோலி சோபிக்கத்தவறும் பட்சத்தில் தென்னாபிரிக்க அணியின் ஒருநாள் கப்டன் டிவில்லியர்ஸ் தரப்படுத்தலில் முதல் இடத்திற்கு முன்னேறும் வாய்ப்பு ஏற்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாய் கோட்ட சம்பியன்கள்


இளவாலை ஹென்றியரசர்


இளவாலை ஹென்றியரசர்


மானிப்பாய் இந்து

(இளவாலை)

சண்டிலிப்பாய் கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்துப் போட்டியின் சம்பியன் பட்டத்தை இளவாலை ஹென்றியசர் கல்லூரி மற்றும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி கைப்பற்றிக்கொண்டது.

சண்டிலிப்பாய் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கிடையிலான கோட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி நேற்று முன்தினம் இளவாலை ஹென்றியசர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் 14, 16,18 ஆகிய வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் இடம்பெற்றது.

14 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கோட்ட மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் `கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

16 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்பிரிவின் மூன்றாமிடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலய அணியும் மோதின. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக இடம்பெற்ற 18 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின.

இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இதன் காரணமாக இரு அணிகளாலும் போட்டி நிறைவடையும் வரை கோல் எதனையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 5-3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கானபோட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மாதகல் சென். ஜோசப் மகாவித்தியாலய அணிகள் மோதின. இதில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

சண்டிலிப்பாய் கோட்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில், அதிபர்கள், விளையாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள், விளையாட்டு நலன் விரும்பிகள், இரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர்.

இதேவேளை, கோட்ட மட்டப்போட்டிகள் நிறைவடைந்தவுடன் வலய மட்டப் போட்டிகள் இடம்பெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(93)

# வென்றது யாழ்.இந்து

(மானிப்பாய்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 13 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்றது வருகின்றது.

இதில் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி அணியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணியும் மோதியது.

நாணயற் சுழற்சியில் வெற்றி பெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

49 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 93 ஓட்டங்களைப் பெற்றது.

45 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி ஒரு விக்கெட்டை இழந்து ஏழு ஓ்டங்களைப் பெற்றவேளை போட்டி நிறைவுக்கு வந்தது. போட்டி விதியின் படி முதல் இனிங்ஸில் முன்னிலை பெற்ற யாழ். இந்துக் கல்லூரி வெற்றிபெற்றது.

இதேவேளை, யாழ். இந்துக் கல்லூரி அணி இப்போட்டியின் பிரிவின் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# விளையாட்டுத்துறை அதிகாரிகளுக்கான தேசிய விளையாட்டு விழா

(நாவலப்பிட்டிய)

விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் நாட்டின் அனைத்து மாகாணங்களிலும் சேவை புரியும் விளையாட்டுத்துறையதிகாரிகள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் பங்குபற்றும் விளையாட்டுத்துறை அதிகாரிகளின் தேசிய விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 23, 24 ஆகிய திகதிகளில் நாவலப்பிட்டிய ஜயதிலக விளையாட்டரங்கில் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகேவின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மகிந்த சிந்தனை திட்டத்திற்கமைவாக நாட்டின் விளையாட்டுத்துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் நோக்கோடு சிறுவர்கள், இளைஞர்கள் மற்றும் முதியோர்களை உள்ளடக்கிய வகையில் முன்னெடுக்கப்பட்டு வரும் திட்டங்களுக்கமைவாக நாடளாவிய ரீதியில் அனைத்து விளையாட்டுத்துறை அதிகாரிகளையும் ஒன்றிணைத்து இடம்பெறும் விளையாட்டுப் போட்டி 22 கட்டமாக இடம்பெறவுள்ளது. இவ்வற்றில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

இவ்விளையாட்டுப் போட்டியில் இவ்வருடத்துக்கான சிறந்த விளையாட்டு வீரர் மற்றும் சிறந்த விளையாட்டு வீராங்கனை தெரிவு செய்யப்படுவதோடு, ஏனைய திறமையான வீர, வீராங்கனைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

இவ்விளையாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் மத்திய மாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் பிரமித பண்டார தென்னகோனின் ஏற்பாட்டில் இடம்பெறுமெனவும் மத்திய மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, முதலமைச்சர் சரத் ஏக்கநாயக மற்றும் அமைச்சர் மகிந்தானந்த அழுத்கமகே, ஏனைய மாகாண அமைச்சர்களின் பங்கேற்புடன் இடம்பெறும்.

இப்போட்டிகள் இன ஐக்கியத்தையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தும் வகையில் அமையும் என்ற நம்பிக்கையுடனேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை உதயசூரியன் அபார வெற்றி

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளத்தினால் நடாத்தப்பட்டு வரும் போட்டி ஒன்றில் முல்லைத்தீவு உதயசூரியன் அணி வெற்றிபெற்றது.

இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் அகில இலங்கை ரீதியாக நடாத்தி வரும் காகிள் புட்சிற்றி எப்.ஏ. கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இரண்டாவது சுற்றின் ஒருபோட்டி கடந்த சனிக்கிழமை மருதமுனை மஷீர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் மருதமுனை ஈஸ்ரன்யூத் விளையாட்டுக் கழகம் தன்னை எதிர்கொண்ட பருத்தித்துறை கலைமதி அணி 04 -01 கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

மற்றுமொரு போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை கல்முனை சந்தாங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் முல்லைத்தீவு உதயசூரியன் அணியும், கல்முனை பிர்லியன்ட் அணியும் மோதின. இதில் முல்லைத்தீவு உதயசூரியன் அணி 1-0 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதேவேளை, அண்மையில் வவுனியாவில் நடைபெற்ற போட்டி ஒன்றில் முல்லைத்தீவு சென். யூட் அணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளின் அடுத்த சுற்று ஆட்டங்கள் விரைவில் இடம்பெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# மேற்குலகின் கூட்டுப்பொறுப்பு

(நோர்வேயின் Klassekampen நாளிதழில் யுஹான் சண்முகரட்ணம் கட்டுரையிலிருந்து)

இலங்கையின் எதிர்மறையான போக்கு தொடர்பான மேற்குலக நாடுகளின் விமர்சனம் வரவேற்கத்தக்கது என்னும் அதேவேளை, இந்த நிலைமைக்கான கூட்டுப் பொறுப்பு மேற்குலகிற்கு உண்டு என்பதையும் சொல்ல வேண்டும்.

போரின் போது இலங்கைக்கான முதன்மை ஆயுதம் வழங்கும் நாடாக சீனா இருந்தது என்பது உண்மை. ஆனால் மேற்குலக நாடுகளுக்கும் பெரும் பங்குண்டு. சீனா மற்றும் ரஸ்யாவின் உதவியின்றி இலங்கையின் இராணுவ இயந்திரம் இத்தகு நவீன மயப்பட்டிருக்க வாய்ப்பில்லை. அதேவேளை இலங்கையின் இராணுவ உயர் மட்டத்தினருக்கு பிரித்தானியாவின் Sandhurst இராணுவ பயிற்சிக் கல்லூரி மற்றும் அமெரிக்காவின் Fort Bragg ஆகியனவற்றில் பயிற்சி கிடைக்கப் பெற்றுள்ளனர்.

கிளர்ச்சி அடக்கும் மூலோபாயத்தினை சீனாவிடமிருந்தோ ரஸ்யாவிடமிருந்தோ இலங்கை கற்றுக்கொள்ளவில்லை. மேற்கிடமிருந்தே கற்றுக் கொண்டது. அத்தோடு மேற்கு நாடுகளுடனான புலனாய்வுக் கூட்டுச் செயற்பாடு, மேற்கு நாடுகள் விடுதலைப் புலிகளைத் தடைசெய்தமை போன்றன இறுதிக்கட்டப் போர் இலங்கை அரசாங்கத்திற்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகளை வழங்கியுள்ள காரணிகளாகும்.

மீறல்கள் நடைபெற்றமை தொடர்பாக மேற்குலக நாடுகள் நன்றாக அறிந்து வைத்திருந்தன என்பதை வீக்கிலீக்ஸ் ஆவணங்கள் வெளிப்படுத்தியுள்ளன. அமெரிக்காவின் கூட்டாளியான இந்தியா சிறிலங்காப் படைகளுக்குரிய புலனாய்வுத் தகவல்களை வழங்கியுள்ளது. தமிழ்ப் பிரதேசங்களில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்திய கிபீர்-வானூர்திகள் இஸ்ரேலினால் வழங்கப்பட்டவை.

பகையாளிகளின் அனைத்துலகக்கூட்டு ஒன்று இலங்கைத் தீவினைச் சுற்று வலையம் அமைத்துக் கொண்டது. இந்தியா, பாகிஸ்தான், சீனா, இஸ்ரேல், ஈரான் ஆகிய அனைத்துத் தரப்புகளும் வெவ்வேறு காரணங்களின் அடிப்படையில், தமக்குள்ளேயான பகைமுரண்களுக்கு அப்பால் இலங்கைக்கு உதவின. எதிர் முனையில் தமிழர்கள் தனித்து நின்று தமக்கு எதிராக வந்த அனைத்தையும் தாங்கிக் கொண்டனர்.

நோர்வே ஆதரவுடன் 2002இற்குப் பின் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் இலங்கை அரசாங்கத்தின் கைகள் ஓங்குவதை உறுதிப்படுத்தியதில் அமெரிக்காவிற்கு முக்கிய பங்குண்டு. வோசிங்டனில் உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டினை 2003இல் நடத்தும் முடிவினை அமெரிக்கா எடுத்தது. மாநாட்டில் தமிழ்த்தரப்பின் பங்குபற்றலுக்கான கதவு இம்முடிவினால் மூடப்பட்டது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறினர்.

இலங்கையின் படைபலத்தினை அதிகரிப்பதற்குரிய தனது நிபுணத்துவ வளத்தினை வழங்குவதாக அமெரிக்கா உறுதியளித்தது. விடுதலைப்புலிகளுடன் உக்கிரமான போர் நடைபெற்றுக்கொண்டிருந்த 2007 மார்ச் காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துடன் படைத்துறை உடன்படிக்கை ஒன்றில் அமெரிக்கா கைச்சாத்திட்டது.

இவை அனைத்தும் அரசாங்கத்தின் தன்னம்பிக்கையை மேலும் பலப்படுத்தின. எனவே 2006 முதல் 2009 வரை நாமெல்லாம் சாட்சிகளாகியுள்ள கொடும் போரானது நடைமுறை அர்த்தத்தில் மேற்சொன்ன முண்டுகொடுத்தல்களின் விளைவே ஆகும். ஆனபோதும் நடந்தேறிய நிகழ்வுகளில் மேற்குலகின் கூட்டுச்செயற்பாடுகள் வசதியாக அடக்கி வாசிக்கப்பட்டும் கண்டுகொள்ளப்படாமலும் போயுள்ளமை வருந்தத்தக்கது.




# புஷ்பா தங்கதுரை

## - வைத்தியநாதன் -



நான் சாவி வார இதழில் உதவியாசிரியராகப் பணியாற்றும்போதுதான் ஸ்ரீவேணுகோபாலன் என்கிற புஷ்பா தங்கதுரை எனக்கு அறிமுகமானார். ஊர் உலகுக்கு அவர் புஷ்பாவாக இருந்தாலும், எங்களுக்கெல்லாம் அவர் "ஸ்ரீவை". "சாவி" அலுவலகத்துக்கு ஸ்ரீவை ஆட்டோவில் வந்து இறங்கினால், நேராக வருவது உதவி ஆசிரியர்கள், வடிவமைப்பாளர்கள் இருக்கும் இடத்துக்குத்தான்.

நான் "சாவி" வார இதழில் சேரும்போதே, "திருவரங்கன் உலா" ஸ்ரீவேணுகோபாலனை புகழின் உச்சத்திற்குக் கொண்டு சென்று விட்டிருந்தது. ப்‘பா தங்கதுரையின், "என் பெயர் கமலா", "ஊதாப்பூ கண் சிமிட்டுகிறது", "நந்தா என் நிலா" போன்ற நாவல்கள், தமிழகத்தில் கிளுகிளுப்பு சாகித்தியத்திற்கு முன்னோடிகளாக அமைந்து விட்டிருந்தன. புஷ்பா தங்கதுரையின் எழுத்துக்கு இருந்த வசீகரம் பற்றியும், வரவேற்பு பற்றியும் சொல்லி மாளாது. அவரது பெயரைப் போட்டு தொடர்கதை ஆரம்பமாகிறது என்று விளம்பரம் செய்தால் தைரியமாக 25,000 பிரதிகள் அதிகமாக அச்சிடலாம்.

ஒரு நாள் புஷ்பா தங்கதுரையின் தொடர்கதையை பிழை திருத்தம் பார்த்துக் கொண்டிருந்தபோது, "ச்சே... ஏன் இவ்வளவு மோசமாக எழுதுகிறார்..." என்று ஓர் இடத்தில் நான் சலித்துக் கொண்டேன்.

அதைப் பக்கத்தில் அமர்ந்திருந்த சி.ஆர். கண்ணன் கேட்டுவிட்டு, "நீங்கள் திருவரங்கன் உலா படிச்சிருக்கிறீர்களா?" என்று கேட்டார். "இல்லை" என்றவுடன் தனது மேஜையிலிருந்து "திருவரங்கன் உலா" புத்தகத்தை எடுத்துத் தந்து, "இதைப் படித்துவிட்டு ஸ்ரீவை பற்றி பேசுங்கள்" என்றார் சி.ஆர்.கே.

ஒரு நாள் ஆசிரியர் சாவியிடம், "சார், ஸ்ரீவையை ஏதாவது ஆன்மிகத் தொடர் எழுதச் சொல்லலாமே. "திருவரங்கன் உலா" மாதிரி அதுவும் "க்ளிக்"காகும். புஷ்பா தங்கதுரை பாணியை எழுதத்தான் ராஜேந்திர குமார், பட்டுக்கோட்டை பிரபாகர், ராஜேஷ்குமார்னு எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஸ்ரீவேணுகோபாலனுக்குத்தான் போட்டியோ மாற்றோ கிடையாது!" என்றேன். ஸ்ரீவேணுகோபாலன் எழுதும் "சத்தியமே சாயி" தொடர் விரைவில் வெளிவருகிறது என்று அடுத்த சில வாரங்களில் "சாவி"யில் விளம்பரம் வந்தது.

அன்றைய நிலையில் இரண்டு பேர்களின் அட்டைப் படம் போட்டால், தைரியமாக ஒரு லட்சம் பிரதிகள் அதிகமாக அச்சிட்டாக வேண்டும். ஒருவர் எம்.ஜி.ஆர்., இன்னொருவர் சத்ய சாயிபாபா! "சத்தியமே சாயி" அதை நிரூபித்தது.

ஒரு நாள், ஸ்ரீவேணுகோபாலனின் கே.கே. நகர் வீட்டு மொட்டை மாடியில் பேசிக் கொண்டிருந்தோம். "நீங்கள் எழுதும் கிளுகிளுப்புக் கதைகளும், குறுநாவல்களும் இளைய தலைமுறையின் இதயத்தில் நஞ்சு பாய்ச்சாதா? அவர்களைக் கெடுக்காதா?" என்று கேட்டேன்.

"கதை படிக்கிறது, சினிமா பார்க்கிறது வேறு... நிஜ வாழ்க்கை வேறு... இதெல்லாம் பாதிப்பு ஏற்படுத்தும் என்று நான் நினைக்கவில்லை..." என்றார் ஸ்ரீவை.

அவரே தொடர்ந்தார்.

"வைத்தியநாதன், எழுத்தால் பெரிய மாற்றங்களைக் கொண்டு வர முடியும் என்று நான் நம்பவில்லை... சினிமா வந்து அறுபது எழுபது வருஷமாச்சு. பத்திரிகைகள் பரவலாக சிறுகதை, நாவல்கள் போடத் தொடங்கியும் ஏறத்தாழ அதே காலமாச்சு. இதிலெல்லாம் அடிப்படைக் கருத்து காதல்தான். இத்தனை வருஷமாச்சே, சமுதாயம் காதலை ஏற்றுக் கொண்டிருக்கிறதா? எழுதியதால் மட்டும் மாற்றம் ஏற்பட்டுவிடாது. மாற்றத்திற்கு அந்த சமுதாயம் தயாரானா மட்டும்தான் மாற்றம் வரும்" - அவர் சொன்ன கருத்து இது.

ஸ்ரீவையின் கருத்தை நான் அப்போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போதும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், நல்ல நண்பர்களாகத் தொடர்ந்தோம்.

"நீங்களோ பிரம்மச்சாரி. எப்படி இவ்வளவு ரசனையாக அனுபவித்து, காதல் சமாச்சாரங்களை எழுதுகிறீர்கள்?"

"இதிலென்ன ஆச்சரியம் இருக்கிறது. நான் பிரம்மச்சாரியாக இருப்பதால்தான் இப்படியெல்லாம் கற்பனை செய்ய முடிகிறது. நிஜ அனுபவங்கள் இருந்திருந்தால் எனது எழுத்தில் இந்த அளவுக்கு சுவாரஸ்யம் இருந்திருக்குமா என்று தெரியவில்லை!" - இதுதான் புஷ்பா தங்கதுரையின் பதில்.



அவர்கள் எனக்கு எதிராகப் பிரசாரம் செய்தனர். என்னை ஏதோ எதிராளி போல நடத்தினர். ஒரே அணியில் போட்டியிடுகிறோம் எனத் துளியளவும் எண்ணவில்லை. என்னைத் தோற்கடிப்பதிலேயே குறியாக இருந்தனர். அதற்காக என்னவெல்லாம் செய்ய முடியுமோ அத்தனையும் செய்தார்கள். சிரேஸ்ட அரசியல்வாதியான என்னை நேற்று அரசியலுக்கு வந்தவர்கள் புறக்கணித்தனர்.

# உண்மையை மறைக்கும் ஊடகங்கள்

## - வீ.ஆனந்தசங்கரி பேட்டியிலிருந்து.

அதனை தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எனக்கு எதிராகச் செய்தார். ஆம், சிறிதரன்தான் முழுக்காரணமும். அவர் தன்னை நிகழ்காலப் பிரபாகரன் என நினைத்துக் கொண்டிருக்கிறார். வன்னிக்குத் தான்தான் தலைவர் என்ற இறுமாப்பில் செயற்பட்டு வருகிறார். ஆனால் எம்.பி பதவியை வைத்துக் கொண்டு அவர் செய்யும் பல விளையாட்டுக்கள் எனக்கு மட்டுமல்ல கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கும் நன்கு தெரியும்.

நான் கிளிநொச்சியில் அமோக வெற்றி பெற்றால் அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிடுவேன். அவ்வாறு போட்டியிடும்போது எனக்கு நிச்சயம் வெற்றி கிடைக்கும். அவ்வேளையில் சிறிதரன் இருந்த இடம் தெரியாது போய்விடுவார். அதனைத் தடுப்பதே சிறிதரனின் நோக்கம்.

உண்மையில் தமிழ் ஊடகங்கள் பலவும் இன்று பாரிய தவறினை இழைத்து வருகின்றன. நான் எந்த ஊடகத்தையும் விழித்துக் கூறவில்லை. (பிறகு அவர்கள் எனது செய்திகளைப் போடமாட்டார்கள்) இந்தச் சில தமிழ் ஊடகங்கள் பொய்யைக் கூறினால்தான் அதற்கு முக்கியத்துவம் அளிக்கின்றன. அல்லது ஏதாவது புலிக் கதையைக் கூற வேண்டும். இதனால்தான் நான் கூறும் உண்மைகளை இந்தச் சில தமிழ் ஊடகங்கள் கவனத்திற்கொள்வதே இல்லை. நானும் பொய்யாக புலித் தலைவர் வருவார், அவரது தலைமையில் மாகாண ஆட்சி நடத்துவோம் என்று நான்கு வீரவசனங்களைப் பேசியிருந்தால் ஒவ்வொரு நாளும் முன்பக்கத்தில் கலர் படத்தோடு செய்திகளைப் போட்டிருப்பார்கள். மக்களும் அதை உண்மையென நம்பி வாக்களித்திருப்பார்கள். நானும் வென்றிருப்பேன். ஆனால் இப்போலி நாடகத்தில் நடிக்க நான் விரும்பவில்லை. இனியும் தயாரில்லை. இதனைத் தமிழ் ஊடகங்களும் நிறுத்திக் கொள்ள வேண்டும். அன்று பொய்ச் செய்திகளைப் போட்டு வெற்றி பெற வைத்தீர்கள். இன்று வென்ற உடனேயே பதவிச் சண்டை போட்டு பல துருவங்களாகி வாக்களித்த மக்களை மறந்து நிற்கிறார்கள். அதனை ஏன் மூடி மறைக்கிறீர்கள்.

# சொன்னார்கள்...


"மக்களிடம் நான் சொல்லுவதெல்லாம் எனக்கு எந்த இடையூறுகளும் இல்லை. வதந்திகளை நம்பாதீர்கள். முன்பு எப்படி இருந்தேனோ அப்படியே இப்போதும் இருக்கிறேன். என் பொண்ணு கல்யாணத்தை நல்ல விதமாக நடத்தி முடித்தேன். என் ஆத்தா பக்கத்திலேயே அமர்ந்து வெற்றிலை, பாக்கு இடித்துக் கொடுத்தேன். வாரத்தில் புதன், சனி என இரு நாள்களில் எண்ணெய் தேய்த்து குளித்தேன். உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் பக்குவப்பட கற்றுக் கொண்டேன். மனைவி, மகனிடம் கொஞ்சம் மனம் விட்டு பேசினேன். குலசாமி முன்பு நின்று வேண்டிக் கொண்டேன். வாழ்வின் கடைசி நாள்களில் எடுக்க வேண்டிய ஓய்வை இப்போது இறைவன் நமக்கு கொடுத்திருப்பதாக உணர்ந்தேன். கெட்ட விஷயங்கள் எல்லாம் முடிந்து தெம்பாக இப்போது வந்திருக்கிறேன். எதற்கு போனோம். இப்போது திரும்பி விட்டோம் என எல்லோருக்கும் தெரியும். அவ்வளவு தான். நமக்கு எல்லோரும் ஒன்றுதான். எல்லோரும் நமக்கு வேண்டும்."

**- வடிவேலு**

"சசிகுமாருடன் இணைத்து வந்த கிசுகிசுக்கள் பற்றிய கேள்வியை என்னிடம் கேட்காதவர்களே கிடையாது. சசிசாரை எனக்கு பிடிக்கும். அவரின் முந்தைய படங்கள் பார்த்திருக்கிறேன். "சுந்தரபாண்டியன்" படத்தில் நடிக்க கேட்டார். நடித்தேன். அந்த படம் ஹிட் ஆனதும், அடுத்த படத்திலும் நடிக்க அழைத்தார். நடித்தேன். இதில் என்ன இருக்கிறது? வரும் வாய்ப்புகளைத் தவிர்த்துவிட்டால் அப்புறம் என்ன நடிகை? கிசுகிசுக்களையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ள மாட்டேன். அந்த நடிகர், இந்த நடிகர் என்றெல்லாம் பார்க்க மாட்டேன். ஒவ்வொரு படத்திலும் ஏற்படுகிற திருப்திதான் முக்கியம். என் ரோல் மொடல் நயன்தாரா தான்... ஆச்சரியமாக இருக்கா..? அதுதான் உண்மை. தென்னிந்திய சினிமாக்களில் பத்து வருடங்களைக் கடந்த பின்னரும் நயன்தான் நம்பர் வன். அவரின் அனுபவம், இந்த சின்ன வயதில் யாரும் அடையாத ஒன்று.

**- லட்சுமி மேனன்**


சமீப தமிழ்ப்படங்களில் ஹீரோ என்பவர், தன்னுடன் ஒரு காமெடியன் உட்பட சில நண்பர்களைக் கூட்டிக்கொண்டு திரிவது. பின்னர், ஒரு அழகான பெண்ணை சுற்றிசுற்றி வந்து 'சைட்' அடிப்பது. அந்த பெண்ணை எப்படி காதலிப்பது என்பதை அந்த காமெடியன் மற்றும் நண்பர்களிடம் ஐடியா கேட்பது. அவள் காதலை ஏற்க மறுத்து விட்டால், டாஸ்மாக் சென்று தண்ணி அடித்துக்கொண்டிருப்பது, கானா பாட்டு பாடுவது. இதுபோலத்தான் படத்துக்குப்படம் கதை பண்ணுகிறார்கள். இது வருத்தப்பட வேண்டிய விசயம்தான். தமிழ் சினிமா தொழில்நுட்ப ரீதியாக மாபெரும் வெற்றி அடைந்து கொண்டிருக்கும் நிலையில், இதுபோன்றே அதிக படங்கள் வருவது, சமீபகாலமாகத் தமிழ் சினிமாவில் கதை வறட்சி ஏற்பட்டுள்ளதையே காட்டுகிறது. மேலும் இந்தச் சமுதாயத்தில்தான் நாளை என் மகளும் வாழப்போகிறாள்













என்ற பயமும் சில சமயங்களில் ஏற்படுகிறது. பெரும்பாலான பெற்றோர்களுக்கும், என்போன்றே பயம் ஏற்பட்டிருப்பதையும் உணர முடிகிறது. அதனால் இந்தக் கதை வறட்சியைப் போக்க அனைவருமே முயற்சி எடுக்க வேண்டும்.

**- சூர்யா**

"அதென்ன "இரண்டாம் உலகம்"? எனக் கேட்காதவர்களே இல்லை. "இரண்டாம் உலகம்" என்பதை எப்படி விளக்க முடியும் என்றும் எனக்குத் தெரியவில்லை. நாம்தான் இந்த உலகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாக நினைக்கிறோம். ஆனால் நம்மை மீறிய வெவ்வேறு உலகங்கள் இருப்பதை விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்கின்றனர். இதோ இந்த இடத்தில் பேசிக்கொண்டிருக்கும் நான், வேறு மாதிரியான உலகத்தில் வழிப்போக்கனாக இந்த நிமிடம் இருக்கலாம். இது எப்படி சாத்தியம்? என்ற கேள்வியும் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. கற்பனைக் குதிரைதான் இந்த சினிமா என்றாலும், அதைத் தாண்டிய விஞ்ஞான கண்டுபிடிப்பு இதில் இருக்கிறது. "ஆயிரத்தில் ஒருவன்" ஒரு வரலாற்றை பின்னணியாகக் கொண்டதால், அதை ரசிகர்கள் புரிந்து கொண்டதில் சிக்கல்கள் இருந்தன. இதில் அது நிச்சயம் நிகழாது"

**- செல்வராகவன்**

மலையாள "22 ∴பீமேல் கோட்டயம்" படத்தை தமிழில் "மாலினி 22 பாளையங்கோட்டை" என்ற பெயரில் இயக்கியிருக்கிறேன். இப்படம், சமீபத்தில் நடந்த பாலியல் கொடுமைகளைச் சுட்டிக் காட்டுவதாக உருவாகியுள்ளது. பெண்மை, கற்பு, ஒழுக்கம், இலட்சியம் போன்ற மதிப்பீடுகள் வேறு வேறு அர்த்தங்கள் பெற்று நிற்கின்ற இந்தக் காலத்தில் இந்தக் கதை தமிழுக்கு தேவை. பெண்கள் எந்த விஷயத்தில் பலவீனமானவர்கள் என்பதைத் தெரிந்து கொண்டு எவ்வளவு துயரங்களைக் கொடுக்கிறது இந்தச் சமூகம். அந்த சமூகத்துக்கு ஒரு பெண்ணாக நான் கொடுக்கும் சாட்டையடி இது"

**- ஸ்ரீப்ரியா**

"சினிமா உலகத்தில் இயக்குநராக அறிமுகமான சமயத்தில் எனக்கு பெரிய கர்வம் உண்டு. இந்த சினிமாவையே நான் மாற்றிக் காட்டி விடுவேன் என்கிற அந்தக் கர்வத்தால், நான் தயாரிப்பாளர்களைத் தேடிப் பிடித்ததில்லை. என்னை வைத்துப் படம் எடுக்கவில்லையென்றால் இந்த சினிமாவுக்கு தான் நஷ்டம் என்று சுற்றித் திரிந்த காலங்கள் உண்டு. ஆனால் இப்போது நான் பக்குவமாகியிருக்கிறேன். இப்போது நான் புதுமுகங்களை வைத்து இயக்கிக்கொண்டிருக்கும் இந்தப் படம் வித்தியாசமானது. கதை என்னவென்று சொல்ல முடியாது. ஏனென்றால் இதில் கொஞ்சம் கூட கதை இல்லை"

**- பார்த்திபன்**

# கூண்டு

ஒரு வீட்டில் கூண்டில் கிளியொன்றை வளர்த்தார்கள். அந்தக் கிளிக்கோ வெளியே பறந்து திரிய மிகமிக ஆசை. ஆனாலும் கூண்டை விட்டு வெளியே வர முடியவில்லை.

வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த மரத்தில் ஒரு குருவி ஒன்று இருந்தது. அது தினமும் கூண்டின் மேல் வந்து அமர்ந்து கிளியிடம் பேசிக் கொண்டிருக்கும். யாராவது வந்தால் சட்டென்று பறந்து போய்விடும்.

ஒருநாள் கிளி கேட்டது.

"உன்னை மாதிரி நான் வெளியே இருந்தால், நான் இந்த ஒரே மரத்திலேயே தங்கிக் கொண்டு இந்த வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பறக்கமாட்டேன். பல இடங்களுக்குப் போவேன். உனக்குப் போக முடிந்தும் நீ ஏன் இங்கேயே கிடக்கிறாய்?"

அதற்குக் குருவி சொன்னது:

"எனக்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லை. அதனால் வேறு இடத்துக்குப் போக வேண்டும் என்று தோன்றவில்லை. கட்டுப்பாடு இருந்தால்தான் அதை மீறத் தோன்றும்"



# ஆரோக்கியம் உங்கள் கையில்!



☆ அதி மதுரத்தை வாயில் போட்டு ஒதுக்கி, அதன் சாறை விழுங்கினால் இருமல் உடனே நின்றுவிடும்.

☆ தலைசுற்றல், மயக்கம் வந்தால் அதற்கு அரை டம்ளர் தண்ணீரில் 4 ஏலக்காய்களை நசுக்கிப் போட்டு, பனை வெல்லமும் போட்டு, கஷாயமாக்கிக் குடிக்கலாம்.

☆ விருந்தில் அதிக எண்ணெய், மசாலா உணவுகளைச் சாப்பிட நேர்ந்தால், சிறிது நேரம் கழித்துச் சூடான வெந்நீர் அருந்தினால், கொழுப்பு தங்காது. உணவு செரிமானம் ஆகும்.

☆ சாப்பிட்டது நன்கு சமிபாடடைய தினமும் நிலக்கடலை ஒருகைப் பிடி அளவு சாப்பிடலாம். பல்வேறு சத்துக்கள் கொண்ட நிலக்கடலையில் விற்றமின் "பி" நிறையவே உண்டு. முந்திரிப் பருப்பில் உள்ள புரதத்தை விட அதிக அளவு நிலக்கடலையில் புரதம் இருக்கிறது.

☆ முட்டையில் உள்ளதைவிட இரண்டரை மடங்கு அதிகமான புரதச் சத்து நிலக்கடலையில் உள்ளது.

☆ உடல் எடை குறைவாக உள்ளவர்கள், தினமும் ஒரு பிடி நிலக்கடலைத் தோலுடன் சிறிது வெல்லம் சேர்த்துச் சாப்பிட எடை கூடும்.

☆ மாதவிடாய்க் காலங்களில் அதிக இரத்தப்போக்கு உடையவர்கள் கொத்தமல்லி ஜூஸ் குடிப்பது நல்லது.

☆ சர்க்கரைப் பொங்கல் சாப்பிடுவது உடம்புக்கு மிகவும் நல்லது. பொங்கலில் போடப்படும் முந்திரிப் பருப்பு நரம்புத் தளர்ச்சி ஏற்படாமல் தடுக்கும். நரம்புகளுக்கு பலத்தையும் கொடுக்கும். உலர்ந்த திராட்சை மலச்சிக்கலைக் குணமாக்கும். மயக்கம் ஏற்படாமல் தடுக்கும். பாசிப் பருப்பு மனக்கோளாறுகள் ஏற்படாமல் தடுக்கும். ஏலக்காய் நஞ்சை முறிக்கும். பசு நெய் போதைப் பழக்கம் ஏற்படாமல் தடுக்கும்.

☆ வாழைத்தண்டு சிறுநீர்ப் பாதையில் இருக்கும் கல்லைக் கரைக்கும்.

☆ முட்டைக்கோஸ், அகத்திக்கீரை, குடல்புண், வாய்ப்புண் ஆகியவற்றை அகற்றும்.

☆ வெந்தயக்கீரை எலும்பு தேய்மானத்தைத் தடுக்கும்.

☆ சிறுவெங்காயம் உடல் சூட்டைத் தணிக்கும்.

# வன்னேரிக்குளம் முதியோர் இல்லத்தை மீள ஆரம்பிக்குமாறு கோரிக்கை

(கிளிநொச்சி)


கிளிநொச்சி மாவட்டத்தின் வன்னேரிக்குளம் பகுதியிலுள்ள யோகர்சுவாமிகள் திருவடிநிலை முதியோர் இல்லத்தை புனரமைத்து மீள ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் குழு கோரிக்கை முன் வைத்துள்ளது.

இம்மாவட்டத்தில் யுத்த அனர்ததங்களின் பின்னர் முதியோர் இல்லம் ஒன்று கட்டாயம் தேவையாகவுள்ளது. பல முதியோர் கவனிப்பாரற்று வாழ்கின்றனர். பல முதியோர் தேவைகள் இன்றி கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இம்மாவட்டத்தில் புதிய முதியோர் இல்லத்தை அமைப்பதை விட வன்னேரிக்குளத்தில் உள்ள யோகசுவாமிகள் திருவடி நிலைய முதியோர் இல்லத்தை புனரமைத்து மீள இயங்கவைப்பது இலகுவானதாகும் என சுட்டிக் காட்டப்படுகிறது.

இதேவேளை இவ் இல்லத்தை புனரமைப்பதற்கு 7 மில்லியன் ரூபா நிதி தேவை என சமூக சேவைத் திணைக்களத்தால் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கவனிப்பாரற்ற முதியோர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குறித்த முதியோர் இல்லத்தை புனரமைத்து மீள ஆரம்பிக்க உரியவர்கள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என மூத்த பிரஜைகள் குழு வேண்டு கோள் விடுத்துள்ளது. (கே)



யுத்த அனர்த்தத்தினால் சேதமடைந்த முல்லை ஆனந்தபுரம் அ.த.க.பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் 2 மாடிக் கட்டடம். (கே)

# நட்டாங்கண்டல் வைத்தியசாலையில் நடமாடும் மருத்துவமுகாம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நட்டாங்கண்டல் மருத்துவமனையில் நடமாடும் மருத்துவமுகாம் ஒன்று நேற்று முன்தினம் இடம் பெற்றது.

மருத்துவமனையில் மு.ப. 10.30 மணியளவில் ஆரம்பமாகி நடைபெற்ற இம் மருத்துவ முகாமில் துணுக்காய் லயன்ஸ்கழக் ஆளுநர், முல்லை மாவட்ட பிரதி சுகாதார பணிப்பாளர் திலீபன், மாந்தை கிழக்கு பிரதேச செயலர் த.பிருந்தாகரன் மாந்தை கிழக்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் த.தயானந்தன், 612 ஆவது படைப்பிரிவின் அதிகாரி பண்டார ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்நடமாடும் சேவையில் யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களைச் சேர்ந்த பிரபல வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு நீரிழிவு, இரத்தழுத்தம், பற்சிகிச்சை, காது, கண் போன்ற பகுதி நோய்கள் தொடர்பாக மக்களுக்கு ஆலோசனைகள் வழங்கியதுடன், சிகிச்சைகளுக்காக பரிந்துரை செய்தனர்.

இதில் 1500 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் கலந்துகொண்டு பயன் பெற்றனர். அத்துடன் லயன்ஸ் கழகத்தினால் தென்னங்கன்றுகள் மற்றும் உடுபுடவைகள் என்பனவும் இதில் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (140)

# ஜனாதிபதியின் பிறந்ததினம் விசேடகூட்டு வழிபாடு

(மல்லாவி)

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்தநாளை முன்னிட்டு நேற்றுமுன்தினம் நாடுபூராவும் விசேட நிகழ்வுகள் இடம் பெற்றன. இதன்படி நட்டாங்கண்டல் முத்துமாரியம்மன் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் மு.ப. 10 மணிக்கு விசேட கூட்டு வழிபாடு இடம்பெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் க.தயானந்தம் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டு வழிபாட்டில் பலர் கலந்துகொண்டனர். மேலும் சிவபுரம் சிவனாலயத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 12 மணியளவில் நடைபெற்ற பூசை பழிபாடுகளில் நட்டாங்கண்டல் 612 ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த பண்டார உள்ளிட்ட இராணுவ அதிகாரிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (140)

# தரம் 5 பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் தரும் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் வித்தியாலயத்தில் அதிபர் ப.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இப்பாடசாலையில் இம்முறை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த 12 மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளதுடன், 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பின்தங்கிய பாடசாலையான இப்பாடசாலையில் இந்த வருடம் 12.6 வீதம் புலமைப்பரிசில் சித்தி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும் கிளிநொச்சி மகாதேவா சைவச்சிறுவர் இல்ல முகாமையாளருமான சி.இராசநாயகம் ஆகியோர் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைத்தனர். (கே)

# பரமர் சங்கமம்



'இடம் கண்டால் மடத்தையும் புடுங்குவான்' என்பதற்கு இன்னொருவருக்கு உரிய பொருளைக்கையாடுவதற்கும் ஒப்பீடு செய்வது முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுவதாக அமையும் எண்டாலும் நான் சொல்ல வாற விசயம் அப்புடித்தான் உங்களுக்குப் படும்.

இம்மாதம் 3ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியாவில் இருந்து கொழும்புக்குச் சென்ற தென் இந்தியாவைச் சேர்ந்த போதகர் தேவராசா என்பவரிடம் இருந்து கைத்தொலைபேசி ஒன்றைக் கையாடல் செய்யப்பட்டுள்ளது.

போதகர் தேவராசா மறுநாள் 4ஆம் திகதி விமானம் மூலம் நாட்டுக்கு பயணிக்கவே வவுனியாவில் இருந்து கொழும்பு சென்றார். குடா நாட்டில் அமைந்துள்ள அடைக்கலக் கூடார சுவிஷேச சபைகளில் சமய ரீதியான பரப்புரைகளை முடித்து வவுனியாவிலும் அமைந்துள்ள சபைகளிலும் போதங்களை செய்ய வேண்டி இருந்தது.

அங்கிருந்து நாடு திரும்பும் வழியிலேயே அவரது கைத்தொலைபேசி கையாடப்பட்டுள்ளது. அவ்விடயத்தை அவர் இங்கேயுள்ள அபிமானிகளுக்குத் தெரிவித்தும் இருந்தார். 077 196 9237 என்னும் இலக்கத்தை அத்தொலை பேசிக்கு அழைப்பு எடுத்தால் மறுமுனையில் கதைத்தவர் தனக்குத் தமிழ் தெரியாதென தமிழிலேயே கூறி இருக்கிறார்.

தமிழில் தொடர்ந்தும் கதைத்தவர் யாழ்.மல்லாகம் பகுதியில் இருந்தே கதைப்பதாகவும் கூறியுள்ளார். மேற்படி இலக்கத்தில் கதைப்பதால் தனக்கொன்றும் ஆபத்து வந்துவிடப் போவதில்லை என்னும் துணிச்சலுடனே அவ்விதம் நடந்து கொள்ளவும் முடிந்திருக்கிறது.

நாட்டில் இவ்வாறு கொள்ளை அடிக்கும் கோஷ்டிகள் மலிந்து போயுள்ளதை நாளாந்தம் பத்திரிகைகளை விரித்தால் செய்திகளைப் பரக்கத் காணலாம். இதற்கெல்லாம் சம்பந்தப்பட்டவர்களின் கவனயீனங்களே காரணமாக அமைகின்றன. இவ்வேளை கொழும்புக்கொச்சிக்கடையில் பிரபலமான பிற்பொக்கற் பேர்வழி கூறியதுதான் ஞாபகத்துக்கு வருகிறது.

'பிற்பொக்கற' அடிக்காத எண்ணத்துடன் பயணிக்கையில் அதனைச் செய்செய்யென்று அறிவுறுத்துவது போன்றே சிலர் பணநோட்டுக்களை பொக்கற்றுகளில் வைத்துக்கொண்டு வருவதாகவும், அந்நபர் கூறி இருந்தார். திருடனாய் பார்த்து திருந்தப் பார்த்தாலும் இந்தச் சமூகம் அதனைச் செய்யவே வலியுறுத்துகின்றதல்லவா?

ஆனால் கையாடப்பட்ட தொலைபேசிக்குத் தொடர்பு கொள்கையில் தனக்குத் தமிழ்தெரியாதென தமிழில் கதைக்கவும், தன்னை மேற்படி இலக்கத்தில் வைத்து மடக்கி விடவும் முடியாதெண்ட துணிச்சல் அசட்டுத்தனமாக இருக்காதென்பதும் உண்மை!

'எரிகிற வீட்டில் அகப்பட்டது' லாகபமென நினைப்பதும் உடமையாளனுக்கே பொருந்தும். இதை இடம் கண்டால் மடத்தையும் புடுங்குவான் எண்டுதான் குறிப்பிட வேண்டும். சொல்லுங்க பாப்பம் இல்லையேபின்னை...

# அடையாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து க.பொ.த.(சா/த) பரீட்சைக்குத் தோற்றும் ஒக்ரோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த மாணவர்களால் பாடசாலை மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அடையாள அட்டை விண்ணப்பங்களில பெரும் பகுதி ஆட்பதிவு திணைக்களத்தால் பாடசாலைகளிற்கு வழங்கப்பட்டுள்ளது.

இத்தகைய செயற்பாட்டினை ஒழுங்குபடுத்தி உதவிய திணைகள ஆணையாளர் மற்றும் அதிகாரிகளிற்கு யாழ்ப்பாணக் கல்விச் சமூகம் தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றது.

மேலும் இதுவரை விண்ணப்பித்து அடையாள அட்டை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் இருப்பின் பாடசாலை அதிபர்கள் வலயக் கல்வி அலுவலகம் ஊடாக ஆட்பதிவுத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# முரசின் இன்றைய பலன்



(20.11.2013 புதன்கிழமை)

விஜய வருஷம் கார்த்திகை மாதம் 04 ஆம் திகதி. திருதியை/சிதிதம்.
மிருகசீரிடம் நட்சத்திரம் மாலை 06.11 வரை.
பின் திருவாதிரை.
இராகுகாலம் 12.09- 01:39 வரை. சுபநேரம் 04.39- 06.09 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கினால் முரண்பாடு தீர்ந்து சுமுகநிலை உருவாதல், அன்பால் பழகிய குடும்பத்தை விட்டு பிரியநேரிடுவதால் மனத்துயர் அதிகரித்தல். |
| ரிஷபம் | தாரத்தின் புத்திமதியை உதாசீனஞ்செய்து உதவிசெய்தமையால் மோசடிக்குள்ளாதல், பிதாவின் புத்திமதியைப்பின்பற்றியதால் கண்ணுக்கு வந்ததுயர் புருவத்துடன் தப்பிவிடல். |
| மிதுனம் | நேர்முகத்தேர்வில் நம்பகத்தன்மை இன்மையால் மனவாட்டமடைதல், குறைந்த விலையுள்ள பொருட்களைக் கூடிய விலை கொடுத்து வாங்கியதால் தகரார் ஏற்படல். |
| கடகம் | வாகனத்தால் ஏற்பட்ட காற்றின் சுழற்சியில் அகப்பட்டு விபத்தேற்படல், டெங்குநோய் ஏற்பட நுளம்புகள் பெருக்கத்திற்கு இடம் கொடுத்ததென்று எச்சரிக்கையும், தண்டமும் பெறுதல். |
| சிம்மம் | நாய் குறுக்கே ஓடியபடியால் தலைக்குவந்த ஆபத்து தலைப்பாகையுடன் சென்று விடல், வெளியூரில் விசா பெற்றுள்ள பெண்மணியை விவாகம் செய்ய விளம்பரப்படுத்தல். |
| கன்னி | கணக்கு வழக்கில் தில்லுமுல்லு காணப்பட்டதால் காசாளருடன் களேபரநிலை உண்டாகல், ஞாபகமறதியில் தொலைபேசி இலக்கங்களை பிழையாக கொண்டதால் எச்சரிக்கை செய்தல். |
| துலாம் | தாழ்வு மனப்பாங்கை எடுத்தெறிந்து விட்டு தைரியத்துடன் செயற்பட்டதால் காரிய ஜெயம், விடாப்பிபடியாக நின்றதால் பழைய நிலுவையின் ஒரு பகுதி கைக்கெட்டல். |
| விருச்சிகம் | ஆசானின் நடவடிக்கையில் சந்தேகம் வலுத்ததால் தொடர்பைத்துண்டித்தல், திடீர் சோதனைக் குழுவின் வருகையால் தில்லுமுல்லு வெளிப்பட்டுவிடலாம் என்ற பதகளிப்பு நிலையில் இருத்தல். |
| தனுசு | பணிநிலை வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் செய்ததால் நன்மை கிட்டுதல், திருமணம் புரிந்து திருப்தியின்மையினால் விவாகரத்து செய்ய எண்ணல். |
| மகரம் | சொந்த மனையை விட்டு விலகி மீண்டும் குடியிருக்க சந்தர்ப்பம் கிட்டியதால் ஆனந்தம், உள்ளூர் மணமகனை தட்டிக் கழித்து வெளியூரில் விவாகம் செய்ய அடம்பிடித்தல். |
| கும்பம் | மிதிபலகையில் பிரயாணஞ்செய்ய முற்பட்ட போது விபத்தினின்றும் மயிரிழையில் அருந்தப்பு, பரீட்சை சித்தியினால் உத்தியோகத்தில் உயர்வடையும் செய்தி கிட்டுதல். |
| மீனம் | வீட்டில் யாருமில்லை என்ற துணிவில் திருடர் பாடு கொண்டாட்டம், குருமாற்றம் பாதகமாக இருப்பதினால் அலைச்சலும் வேளைதப்பிய உணவும் ஏற்படல். |

# சிறப்பாக நடைபெற்ற பௌர்ணமி கலைவிழா

வலிகாமம் கல்வி வலயத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி கலை விழா நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடாத்தப்பட்டன.

வலயக்கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில், சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

விழாவின் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கலாநிதி. த.கலைமணி கலந்து சிறப்பித்தார்.

மனித வாழ்வில் கலைகளின் பங்கு பற்றிச், சிறப்புரை ஆற்றியிருந்தார். அத்துடன் பாடசாலை பாடவிதானத்தில் கலைகளின் பங்கு முக்கியமானது எனவும் பாரம்பரிய மரபுக்கலைகளை பாடசாலைகள் வளர்க்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

விருந்தினர்களையும், பார்வையாளர்களையும் கவரும் வகையிலும் மகிழ்ச்சியூட்டும் வகையிலும் பல்வேறு அரங்க கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தன.

இணுவில் மத்திய கல்லூரி மாணவிகளினதும், இராமநாதன் கல்லூரி மாணவிகளினதும் வரவேற்பு நடனங்கள் விருந்தினர்களுக்கு விருந்தளிப்பதாக இருந்தன.

பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க.த.க பாடசாலை மாணவ, மாணவிகளின் கிராமிய இசை, எமது பாரம்பரியம் மிக்க கிராமிய இசை வடிவத்தை மீட்டிப் பார்க்கும் சந்தர்ப்பத்தை அளித்திருந்தது. (06)

# "கடலின் கடைசி அலை" கவிதை நூல் வெளியீடு



பொலிகையூர் சு.க.சிந்துதாசனின் "கடலின் கடைசி அலை" கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை மணிக்கு யாழ்.பொலிகண்டி இ.த.க பாடசாலை மண்டபத்தில் சு. குணேஸ்வரன் (ஆசிரியர்) தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் வரவேற்புரையை ஆ. முல்லைத்திவ்யன் நிகழ்த்தினார். நூலின் வெளியீட்டுரையை பருத்தித்துறை பிரதேச செயலரும் கவிஞருமான த.ஜெயசீலன் நிகழ்த்தினார்.

நூலின் முதற்பிரதியை சண்முகசுந்தரம் பிறேம்குமாரும் (செல்லமுத்தூஸ் புடவையகம், நெல்லியடி), சிறப்புப்பிரதியை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் சே.செல்வசுகுணாவும் பெற்றுக் கொண்டனர்.

நூல் மதிப்பீட்டுரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை விரிவுரையாளர் இ. இராஜேஸ்கண்ணன், தானா விஷ்ணு ஆகியோரும் ஏற்புரையை நூலாசிரியர் சு.க சிந்துதாசனும் நிகழ்த்தினர். (90)

## பாதிக்கப்பட்ட ஆலயங்கள் பதிவு செய்தல்

வரணி பிரதேசத்தில் போரினால் பாதிக்கப்பட்ட இந்து, கிறிஸ்தவ ஆலயங்களைப் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக சாவகச்சேரி பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென ஜே-339 பிரிவு, கிராம அலுவலர் அ.பிரதீபன் அறிவித்துள்ளார். (150)

# போக்குவரத்து அமைச்சினால் பதவிகளுக்கு விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

போக்குவரத்து அமைச்சில் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கல்வித்தகைமையாக பல்கலைக்கழகத்தில் சட்ட பட்டதாரியாகவும், உயர் நீதிமன்றில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் எடுத்திருத்தல் வேண்டும். அத்துடன் மூன்று வருட அனுபவம் பெற்றிருப்பதுடன், இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றக் கூடிய உடல், உளரீதியாக பொருத்தமுடையவராயிருத்தல் அவசியம். அத்துடன் அதிசிறந்த ஒழுக்கமுடையவராகவும் 21 - 45 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், போக்குவரத்து அமைச்சு, இல 01, டி.ஆர்.விஜயவர்த்தனா மாவதை, கொழும்பு - 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையில் கணனி அறிவும், ஆங்கில மொழித் தேர்ச்சி என்பவற்றுக்குமேலதிகமான புள்ளிகளும் பெற வாய்ப்புண்டு. சம்பள அளவுத்திட்டம், சேவை நியதிகளும், நிபந்தனைகளும் மற்றும் மாதிரி விண்ணப்பப் படிவங்களுக்கும் 15.11.2013 அரச வர்த்தமானியை பார்வையிடலாம். (105)

# முள்ளியவளை பிரதேசத்தில் தேசிய மரநடுகைத் திட்டம்



(முள்ளியவளை)

தேசிய மரநடுகை தினத்தையொட்டி முல்லைத்தீவு மாவட்ட முள்ளியவளை பிரதேசத்திலும் மர நடுகை நிகழ்வுகள் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

நிகழ்வுகள் முள்ளியவளை கிழக்கு பொதுநோக்கு மண்டபம், முள்ளியவளை தெற்கு முள்பள்ளி மற்றும் முள்ளியவளை மத்தி சமுர்த்தி வங்கி ஆகிய இட்ங்களில் முள்ளியவளை வலய சமுர்த்தி உதவி முகாமையாளர் யோய்ஸ் குமார் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் திருமதி ஆரணி தவபாலன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்துடன் பெருமளவான பிரதேச மக்களும் கலந்து கொண்டனர். (125)

# ஆயுர்வேதம்



## சிறுநீர் கழித்த பின் எரிச்சலா...?

சிறுநீர் போய் வந்தவுடன் தொடங்கும் எரிச்சல் தொடர்ந்து அரை மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தால் அது பித்த தோஷத்தின் காரணமாகும். இதயத்துக்கும் தொப்புளுக்கும் இடைப்பட்ட பகுதியில் குடி கொண்டுள்ள பித்த தோஷத்தின் குணங்களாகிய சிறிது நெய்ப்பு, ஊடுருவும் தன்மை, சூடு, லேசு, துர்நாற்றம், இளகும் தன்மை, நீர்த்தது போன்றவை தம் அளவிலிருந்து கூடும் தறுவாயில், அவை கல்லீரல் வழியே சிறுநீர்ப் பாதைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சிறுநீர்ப்பை வழியாக சிறுநீரில் கலந்து வெளியேறுகின்றன. அப்போது சிறுநீர் கழிக்கும் போது அதிக எரிச்சல் ஏற்பட்டு, சிறுநீர்க் குழாயில் அவை விட்டுச் செல்லும் உஷ்ணமானது, நெடுநேரம் நீடிக்கிறது.

இந்தக் குணங்களை இனிப்புச் சுவை, குளிர்ச்சியான தன்மை, சிறுநீர்ப் பாதையில் ஏற்படும் புண்ணும் வெடிப்பும் ஆற்றக் கூடிய திறன் வாய்ந்த பழங்களையும், உணவு வகைகளையும், மருந்து வகைகளையும் அந்த நோயாளி சாப்பிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார். அந்த வகையில் பழங்களில் அத்திப் பழம் அவர் சாப்பிட உகந்தது. அதிலுள்ள இனிப்புச்சுவை, குளிர்ச்சித் தன்மை, நெய்ப்புத் தன்மையால், பித்தத்தின் சகஜநிலை மாற்றத்தால் தோன்றும் மயக்கம், அங்கங்களில் எரிச்சல், தண்ணீர் வேட்கை, உடல் ஆயாசம், உதடு, நாக்கு, வாய், சிறுநீரகங்களில் ஏற்படும் எரிச்சல், புண், வெடிப்பு போன்றவை குணமடைகின்றன.

இக் கனிகள் எளிதில் ஜீரணமாவதுடன் கல்லீரல், மண்ணீரல் போன்ற ஜீரண உறுப்புகளை நல்ல முறையில் சுறுசுறுப்புடன் செயலாற்றச் செய்து, பித்தத்தின் குணங்களின் வரவை நீர்க்கச் செய்து வெளியேற்றிவிடும். சிறுநீரில் வெல்லம் உள்ளவர்கள் கூட இக்கனியை உபயோகித்து குணம் பெறலாம்.

இதற்கு அடுத்ததாக உலர் திராட்சைப் பழம் சாப்பிட நல்லது. சுமார் 10 - 15 திராட்சையை சிறிது தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வைத்து, மறுநாள் காலை, அது ஊறிய தண்ணீரிலேயே கசக்கிப் பிழிந்து வடிகட்டி, பசும் பாலுடன் கலந்து காலை, மாலை உணவுக்கு முன் சாப்பிட்டு வந்தால், சிறுநீர் கழித்த பின் நீடிக்கும் எரிச்சலைக் கட்டுப்படுத்தும். பேரீச்சம்பழம் சாப்பிடவும் உகந்ததே.

மண்பானையில் தண்ணீர் ஊற்றி, அதில் வெட்டிவேர், விளாமிச்சை வேர், சந்தசிராத்தூள், கரும்பு வேர், நெருஞ்சி விதை, பூசணி, நீர்த்துப் பூசணி, வெள்ளரி, சுரைக்காய், பீர்க்கங்காய் விதை போன்றவற்றைச் சிறிய அளவில் போட்டு, பானையின் வாயை மெல்லிய துணியால் மூடிக் கட்டி, இரவு முழுவதும் மொட்டை மாடியில் சந்திர ஒளி படும்படி வைத்து, மறுநாள் காலை, தண்ணீரை மட்டும் சுமார் 300 -500 மி.லீ. உணவுக்கு முன் குடித்து வந்தால், உடல் உஷ்ணம் தணிவதுடன், சிறுநீர் கழித்த பின் ஏற்படும் எரிச்சலையும் கட்டுப்படுத்தும்.

திரிபலை எனும் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சூரணத்தை 10 கிராம் எடுத்து 500 மி.லீ. தண்ணீரில் கொதிக்கவிட்டு, 250 மி.லீ. ஆனதும், குளிர்ந்த பிறகு வடிகட்டி, சிறுநீர் கழித்த பிறகு வெறும் தண்ணீரால் முதலில் சிறுநீர் வரும் துவாரத்தைக் கழுவிய பிறகு, திரிபலைத் தண்ணீரால் கழுவி வந்தால், விரைவில் இந்த உபாதை குறைய வாய்ப்பிருக்கிறது.

உணவில் பித்தத்தின் குணங்களை சீற்றமடையச் செய்யும் புளி, உப்பு, காரம் பட்டை, சோம்பு, கரம் மசாலா, எண்ணெய்ப் பொருட்கள், புலால் உணவு வகைகளாகிய மீன், கோழி, கருவாடு போன்றவற்றைத் தவிர்த்து கசப்பு, துவர்ப்பு, இனிப்புச் சுவை கொண்ட உணவு வகைகளை அதிகம் உண்பது நல்லது. வாழைத் தண்டு, வாழைப்பூ, சிறு கீரை, அரைக்கீரை, மணத்தக்காளி, வெள்ளரிப் பிஞ்சு, போன்றவை சாப்பிட மிகவும் உகந்தது.

சதவெரீகுலம் எனும் லேகியம், வஸ்த்யாமயாந்தகம் எனும் நெய் மருந்து, பிருகத்யாதி, புனர்நவாதி எனும் கஷாயம், சந்தானஸவம், உசீராஸவம் எனும் ஆஸவ மருந்துகள், பிரவாள பஸ்மம், அப்ரக பஸ்மம் போன்ற பஸ்ம மருந்துகள், ஆயுர்வேத மருத்துவரின் ஆலோசனைப் படி சாப்பிடச் சிறந்தவை.

# மானிய விதை உருளைக்கிழங்கு போதாது தனியாரிடமும் வாங்க முடியாத நிலை

## விவசாயிகள் பாதிப்பு

யாழ்.விவசாயிகளுக்கென 50 வீத மானிய விலையில் 200 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்குகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது 132 மெற்றிக்தொன் விதை உருளைக் கிழங்கு வழங்கப்பட உள்ளது. இதனால் யாழ். மாவட்ட விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ள னர்.

200 மெற்றிக்தொன் கிடைத்தால் 4 அந்தர் வீதம் பங்கீட்டு அடிப்படையில் வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. தற்போது பங்கீட்டு அளவு குறைக்கப்பட்டு இரண்டு அரை அந்தர் (125 கிலோ) வழங்கப்படவுள்ளது.


மானிய விலையில் வழங்கப்படவுள்ள உருளைக்கிழங்கின் அளவு குறைக்கப்பட்டதால் விவசாயிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பயிர் செய்வதற்கென பண்படுத்திய நிலத்தை பயன்படுத்தாமல் விட வேண்டும். அல்லது தனியாரிடம் 14 ஆயிரம் ரூபா விலையில் 50 கிலோ விதை உருளைக்கிழங்கை கொள்வனவு செய்து பயிரிட வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

மானிய விலையில் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டால் இந்த வருடம் 100 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்குப் பயிர்செய்கை மேற்கொள்வதற்கு விவசாயத் திணைக்களம் உத்தேச மதிப்பீட்டை மேற்கொண்டிருந்தது.


ஆனால் விதை உருளைக் கிழங்கின் அளவு திடீரெனக் குறைக்கப்பட்டதால் இந்த வருடத்திற்கான உற்பத்தி அளவில் உரிய இலக்கை அடைய முடியாதுள்ளது என விவசாய திணைக்கள மதிப்பீடுகள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணச் சந்தைகளில் ஒரு கிலோ உருளைக்கிழங்கு 120 ரூபாவிற்கும் அதிகமாக விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.



சமூக சேவைகள் அமைச்சின் வடமாகாணத்திலுள்ள உத்தியோகத்தர்களை சமூக சேவைகள் அமைச்சின் மேலதிக செயலாளர் வசந்திகா டயஸ். , மத்திய அரசின் சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளரும் முதியோர்களுக்கான தேசிய செயலகப் பதில் பணிப்பாளருமாகிய அனுசா கோகுல பெர்னாண்டோ ஆகியோர் நேற்றுமுன்தினம் காலை கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடியபோது... (90)

# வேலணை பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்



வேலணை பிரதேச சபை உறுப்பினர் இருவர் வெளிநாடு சென்றதன் காரணமாக அவ்வெற்றிடமாகவிருந்த இடத்தினை நிரப்புவதற்கு புங்குடுதீவு பகுதியைச்சேர்ந்த கையிலாசப்பிள்ளை ஸ்ரீஸ்காந்தன் அவர்கள் நேற்றுமுன்தினம் வேலணை பிரதேச சபை தவிசாளர் சின்னையா சிவராசா முன்னிலையில் உறுப்பினராக பதவியேற்றுள்ளார்.

இதன் போது வேலணை பிரதேச சபை செயலாளர் உட்பட அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டார்கள்.

# மலர் வெளியீடும் கலை விழா நிகழ்வும்

(மானிப்பாய்)

யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நீதம் மலர் மற்றும் வருடாந்த கலைவிழா நிகழ்வு சிறப்பான முறையில் அண்மையில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக யாழ். உயர் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் கலந்து சிறப்பித்ததோடு சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணமும் கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்தின் முன்னாள் பீடாதிபதி செல்வக்குமரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் பல நீதிபதிகள், சட்டத்தரணிகள், பல்கலைகழக பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என அனைவரும் கலந்துகொண்டு இந்நிகழ்வை சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் சட்ட பீடத்தின் வருடாந்த மலரான 'நீதம்' சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர் களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. சட்ட பீட மாணவர்கள் வழங்கிய கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. [illegible])

# பண மோசடியில் ஈடுபட்டவர் வவுனியாவில் கைது

(வவுனியா)

பண மோசடியில் ஈடுபட்டு வந்ததாகக் கூறப்படும் ஒரு வரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் மாலை கைதுசெய்துள்ளனர்.

வங்கிக்கடன், வேலை வாய்ப்பு மற்றும் வாகனம் எடுத்துத் தருவதாகக்கூறி வவுனியாவில் உள்ள பல கிராமங்களைச் சேர்ந்த மக்களிடம் பல இலட்சக்கணக்கான பணத்தை சந்தேக நபர் மோசடி செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது கடன் பெற்றுத்தருவதற்கான போலியான விண்ணப்பப்படிவங்களையும் சந்தேக நபர் வழங்கிவந்துள்ளார்.

மேலும், தான் பணம் வாங்கிய மக்களிடம் தன்னுடன் தொடர்புகொள்வதற்காக வழங்கிய தொலைபேசி இலக்கங்களும் செயலிழந்து காணப்பட்டன. இந்த நிலையில், சந்தேகமடைந்த பொதுமக்கள் சந்தேக நபர் தொடர்பில் உசாரடைந்த நிலையில் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதனைத் தொடர்ந்து சந்தேக நபரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் அவரை கைதுசெய்துள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

# பல்கலை நிதி மோசடியை அறவிட புதிய திட்டம்

தவறான முகாமைத்துவ தீர்மானம் மற்றும் விரயம் காரணமாக பல்கலைக்கழகங்களில் ஏற்படும் நிதி நட்டத்தை, அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடவுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் குறிப்பிடுகின்றது.

கணக்காய்வாளருக்கு காணப்படும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, அவ்வாறானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் எச்.ஏ.எஸ்.சமா[illegible]ர தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் தற்போது இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் பண மோசடி மற்றும் விரயம் என்பவற்றை கட்டுப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# தமிழர் கலாசாரங்களை பாதுகாப்பது அவசியம்

## ஊடக வளங்கள் பயிற்சி மைய இயக்குநர்

வடமாகாணத்துக்குரிய தமிழர்களின் கலை கலாசாரங்களை பாதுகாப்பது மிகவும் அவசியமானது என யாழ். பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய இயக்குநர் தே.தேவானந் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச கலாசார பேரவை நடாத்திய நாடக விழாவும் பரிசளிப்பு வைபவமும் அண்மையில் பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தினி மண்டபத்தில் பிரதேச கலாசார பேரவைத் தலைவரும், பிரதேச செயலருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னைய காலங்களில் இசை, நாடகம், சிந்து நடைக் கூத்து, சமூக சமய நாடகம், சிறுவர் நாடகம் இவைகள் ஒவ்வொன்றும் பிரதேசம் சார்ந்த தனித்துவத்தோடு காணப்பட்டன. அவற்றையும் மீட்டெடுத்து பாது காப்பதற்கான வழிவகைகளை தேடிக் கொள்ளவேண்டும்.

கலைகளைப் பாதுகாக்கும் பணியை கலைஞர்கள் முடிந்தளவு செய்கிறார்கள். கலை கலாசார மேம்பாடுகளில் அதிகூடிய கவனம் செலுத்த வேண்டும். எதிர்காலத்தில் நாடக மன்றங்களை ஊக்குவித்து கலைஞர்களை மதித்துச் செயற்பட வேண்டும் எனவும் தெரிவித்தார். (116 -ரி)

# மாற்று ஆற்றலுடையோர் தின வலிகாமம் வலய போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி..)

மாற்று ஆற்றலுடையோர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் வலய மட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற போட்டிகளின் முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளன. போட்டிகளில் முதல் மூன்று இடங் களைப் பெற்றவர்களின் பெயர், விபரம் வருமாறு,

**தனி இசை, பிரிவு - 1,**

1ஆம் இடத்தை இருவர் பெற்றுள்ளனர், கி.தர்சிகா, (யா/ சுழிபுரம் ஐக்கிய சங்க சைவ வித்தி.), ஜே.அபி லக்ஸ்ரனிஸ்ரன் (யா/இராமநாதன் கல்லூரி), கு.டிலோ சனா (யாழ்.ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்).

பிரிவு 2

த.அமலநிதுஷன் (யா/யூனியன் கல்லூரி), த.சாயிரா (நவாலி மகா வித்தியாலயம்), ஞா.சுவர்ணா (யா/.இராமநாதன் கல்லூரி).

பிரிவு -3

வி.கல்யாணி (யா/ இணுவில் மத்திய கல்லூரி), த.சோபிகா (யா/.வட்டு மத்திய கல்லூரி), சி.நிலாஜினி (யா/ இராமநாதன் கல்லூரி).

பிரிவு - 4

பு.கோபிசாந் (யா/ நவாலி மகா வித்தியாலயம்), த.தர்சிகா (வட்டு. மத்திய கல்லூரி), பா.சசிலா (இணுவில் மத்திய கல்லூரி), சி.வான்மதி (யா/.விக்டோரியாக் கல்லூரி) இருவரும் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளனர். (தொடரும்...)

# கடலுக்குள் பாய்ந்தது ஆட்டோ

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டி வரையான வீதியில் அல்லைப்பிட்டிக்கு அண்மித்த பகுதியில் நேற்றுமுன்தினம் ஆட்டோ ஒன்று கடலுக்குள் பாய்ந்துள்ளது.

ஆட்டோவிற்கும் சாரதிக்கும் எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.


இவ்வீதியில் இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுகின்றன. இதற்கு இவ் வீதியின் அகலம் குறைவாக இருப்பதுடன் சமாந்தரமாகவும் இல்லை என்பதுமே காரணமாகும்.


இவ் வீதியினை திருத்தியமைப்பதற்கு உரிய தரப்பினர் விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் வாகன சாரதிகள் கவனத்துடன் செயற்பட்டால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாது தவிர்க்கலாம்.

அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு பயணம் தாமதமடைவதாகவும் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (சி)


3. 

இப்பென்சிலின் நீளத்தைக் குறிப்பிடுக? ................cm

4. 
இவ்வுருவிலுள்ள நாற்பக்கல்கள் எத்தனை? ..............................

5. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பின்னத்தைக் குறிப்பிடுக.  ...................

6. 3 கழிந்து 10 நிமிடங்களுக்கும் 2 கழிந்து 15 நிமிடங்களுக்கும் இடையில் எத்தனை நிமிடங்கள் உள்ளன? ....................

7. 

A பாத்திரத்தை B,D பாத்திரங்களினால் நிரப்பப்பட வேண்டும். எனின் அப்பாத்திரங்களால் ஊற்றப்பட வேண்டிய தடவைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
1. B = ..................... தடவை 2. D = ..................... தடவை

8. D பாத்திரத்தில் உள்ள நீரைக் கொண்டுள்ள பாத்திரங்களில் உள்ள நீரின் அளவு யாது? ......l ..........ml

9. [00 : 45] இந்நேரத்தை சாதாரண கடிகார நேரமாகத் தருக? .......................................

**(14) பின்வரும் விலைப்பட்டியலை கவனமாக வாசித்து வினாக்களுக்கு விடைத்தருக.**

| அளவு | பொருள் | விலை |
|---|---|---|
| 200g | கடலை | 16.00 |
| 3kg | அரிசி | 126.00 |
| 750ml | தேங்காய் எ. | 69.00 |
| 5 | பேனை | 90.00 |
| 2kg | பயறு | 90.00 |

1. 500g கடலையின் விலை யாது? ..............................
2. 500 மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெய்யின் விலை யாது?
3. 8 பேனைகளின் விலை எவ்வளவு? ..........................
4. ரூபா 100 கொடுத்து 2 பேனை வாங்கும் போது எஞ்சும் பணம் எவ்வளவு? ..........................
5. 1 கிலோகிராம் பயறு, 1கிலோகிராம் அரிசி வாங்கத்தேவையான செலவு யாது? ............................

**(15) பின்வரும் தகவலை வாசித்து விளங்கி தொடர்ந்து ஆறு வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்கள் இடம் பெறவேண்டும்.**
**மனிதன் அவனது சூழலுடன் அவன் நெருங்கிய தொடர்பைக் கொள்ளவேண்டும் அதாவது அதனை நேசிக்க வேண்டும். மாறாக அதனுடன் கண்முடித்தனமாக நடந்துகொள்ளும் போது அதன் சீற்றத்தை மனிதனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை அதனால் தான் பலஇயற்கை அனர்த்தங்கள் எம்மை ஆட்கொள்கின்றது.**

1. ..........................................................
2. ..........................................................
3. ..........................................................
4. ..........................................................
5. ..........................................................
6. ..........................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2014

பகுதி - II
1 மணி 15 நிமி

# கல்வி முரசு

**(1) பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மழையைப் பெறுவதற்கு மனிதனுக்கு காடுகள் அவசியமாகின்றன. விலங்குகள் உயிர்வாழ்வதற்கும் காடுகள் தேவைப்படுகின்றன. நாம் வாழும் சூழலில் காடுகள் முக்கிய அங்கமாகக் கருதப்படுகின்றன. மனிதன் விவசாயத் தேவைகளுக்காக காடுகளை அழிக்கின்றான். சனத்தொகை அதிகரிப்புக் காரணமாக வதிவிடத்தேவையும் அதிகரிக்கின்றது. அதனால் காடுகள் மேலும் மேலும் அழிக்கப்பட்டு குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. காடழிப்புக்காரணமாகக் காலநிலையில் மாற்றம் ஏற்பட்டு மனிதர்கள் நீர் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றனர்.

1. காடுகள் எனும் சொல்லின் ஒத்த சொல்லை தருக? ..............................
2. அழிக்கின்றான் என்ற சொல்லின் எதிர் சொல்லைத் தருக? ..............................
3. காடுகளை அழிப்பதால் ஏற்படும் விபரீதங்கள் இரண்டைக்குறிப்பிடுக?
   1. .............................. 2. ..............................
4. குடியேற்றங்கள் அமைக்கப்படுவதற்கு காரணங்கள் என்ன? ..............................
5. காடழிப்பு எனும் சொல்லை பிரித்தெழுதுக. ..............................
6. பந்தியில் இடம் பெற்றுள்ள அடுக்குத்தொடரைக்குறிப்பிடுக. ..............................
7. உயர்திணை, பன்மை, படர்க்கை பெயர்ச்சொல்லைக் குறிப்பிடுக? ..............................
8. பற்றாக்குறை எனும் சொல்லின் கருத்து விளக்கத்தை தருக? ..............................
9. உயர்திணை, ஒருமை, நிகழ்கால வினைச்சொல்லை குறிப்பிடுக? ..............................

**(2) பின்வரும் பழமொழிகளின் கருத்தை குறிப்பிடுக.**
1. சாண் ஏற முழம் சறுக்கும் ..............................
2. இட்டுக்கெட்டார் எவரும் இல்லை ..............................
3. பருவத்தே பயிர் செய் ..............................
4. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயம் எல்லாம் பேய் ..............................

**(3) பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான தனிச்சொல்லை எழுதுக.**
1. அறுபதாவது ஆண்டு நிறைவு விழா ..............................
2. தாய் தந்தையரை இழந்தவன் ..............................

**(4) பின்வரும் மரபுத் தொடர்களின் கருத்துக்களை குறிப்பிடுக.**
1. கைவிரித்தல்.............................. 2. கண்வளர்தல் ..............................

**(5) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்குக.**
1. ஒலிம்பிக் / கிரேக்க / விளையாட்டு / ஆரம்பிக்கப்பட்டது / முதன்முறையாக / நாட்டில்தான்
..............................
2. நால்களோ / உற்ற / நல்ல / நண்பர்கள்
..............................

**(6) வினாக்களுக்கு விடை தருக**

1. உலகில் அதிக சனத்தொகை கொண்ட நாடு எது? ..............................

2. உலகில் மிகநீளமான நதி எது? ..............................

**(7) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. பால் ..............................  2. தயவு செய்து பேசாதே! ..............................

**(8) கருத்தினை தமிழில் எழுதுக.**

1. Do you like ..............................  2. I am a student ..............................

**(9) சிங்களக் கருத்தினை தமிழில் எழுதுக.**

1. மல்லி பாசலட்ட கியா ..............................  2. ருபியல் விஸ்கக் தென்ன ..............................

**(10) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**


1. வேம்பு பூக்கும் காலம்?
   1. பங்குனி  2. தை  3. சித்திரை  4. ஆடி

2. இரும்புச்சத்து குறைவினால் ஏற்படும் குறைபாட்டு நோய்
   1. குருதிச்சோகை  2. இரத்த அமுக்கம்  3. கண்டமாலை  4. மாலைக்கண்


3. மாசிக்கருவாட்டிலுள்ள போசணைச்சத்து.
   1. கொழும்பு  2. புரதம்  3. காபோவைதரேற்று  4. கல்சியம்

4. 
   இக்குறியீடு குறிப்பிடுவது.
   1. விரைவாகச் செல்ல  2. இதனூடு வெளியேறுக
   3. உள்ளே செல்ல வேண்டாம்  4. மூடிவிடுக.

5. மயக்கமுற்ற நோயாளிக்கு மிகப்பொருத்தமான முதலுதவியாக அமைவது.
   1. சிறிதளவு நீரைத் தெளித்தலும் அருந்துவதற்கு கொடுத்தலும்.
   2. ஆடைகளைத் தளர்த்தி காற்றுப்படவிசிறுதல்.
   3. தலை நிமிர்ந்திருக்குமாறு அமரச்செய்து காற்றுப்பட விசிறுதல்
   4. தலையை நன்கு கீழ் நோக்கித் திருப்பிக் காற்றுப்படச் செய்தல்.

6. 
   அம்புக்குறியால் காட்டப்பட்டுள்ள பகுதியைத் தைப்பதற்கு பொருத்தமான தையல் வகை
   1. கம்பளித்தையல்  2. நரம்புத்தையல்
   3. அடைப்புத்தையல்  4. குறுக்குத்தையல்

7. பின்வருவனவற்றுள் விரைவாக முளைக்கும் வித்து
   1. புளியம் வித்து  2. பலாவித்து  3. போஞ்சிவித்து  4. கொய்யாவித்து

8. 

   இச்செயற்பாட்டின் மூலம் சுவரில் காணக்கிடைப்பது
   1. கருமையான நிழல்  2. ஒளிக்கதிர்கள்
   3. சூரியகதிரின் நிறங்கள்  4. நீர்தெறிப்புக்கோடுகள்

9. இலங்கை நாட்டுக்கல்வியை இலவசக்கல்வியாக பிரகடனப்படுத்தப்பட்ட ஆண்டு
   1. 1948  2. 1972  3. 1942  4. 1945

10. மின்னேரியா தெய்வம் என புகழப்பட்ட அரசன்.
   1. பராக்கிரமபாகு  2. பண்டுகாபயன்  2. விஜயன்  3. மகாசேனன்



11. 
   இக்குறியீடு உணர்த்துவது
   1. பாதுகாப்பற்ற புகையிரதக்கடவை  2. பாதுகாப்பான புகையிரதக்கடவை
   3. புகையுடன் கூடிய புகையிரதம்  4. வளி மாசடைதல்

12. உலர்த்துவதன் மூலம் பேணக்கூடிய உணவுப் பொருள்
   1. பாகல் - வற்றாளை  2. மரவள்ளி - கத்தரி  3. ஈரப்பலா - பாகல்  4. ஈரப்பலா - மாங்காய்

13. வேர் மூலம் இனம் பெருகும் தாவரங்கள்.
   1. அன்னாசி - கற்றாளை  2. வல்லாரை - கங்குன்  3. வல்லாரை - ஈரப்பலா  4. ஈரப்பலா - பலா

14. 
   இந் நடையானது.
   1. கரடி நடை  2. குதிரை நடை
   3. குரங்குப்பாய்ச்சல்  4. நண்டுப்பாய்ச்சல்

15. நுளம்புகளை விரட்டும் முறைகளில் ஒன்று
   1. உடலில் புல்லெண்ணெய் தேய்த்துக்கொள்ளல்  2. பச்சை தென்னோலையை புகையவைத்தல்.
   3. சாம்பிராணி புகைப்போடல்.  4. பழைய டயரை எரித்தல்.

16. கடதாசித் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்.
   1. கற்பிட்டி  2. எம்பிலிபிட்டிய  3. ஹிங்குரான  4. மல்வானை

17. பின்வருவனவற்றுள் மணமுள்ள மலர் எது?
   1. கடுபுல்  2. கடதாசிப்பூ  3. அலரிப்பூ  4. அந்தூரியம் பூ

18. தலையிலே சிவப்பு நிற கொண்டையுடைய சிறிய பறவை எது?
   1. சேவல்  2. இரட்டைச் சொண்டுக்குருவி  3. கொண்டைக்குருவி  4. மரங்கொத்தி

**(11) தேசிய கீதத்தின் இடைவெளியிடப்பட்ட பகுதியை நிரப்புக.**


ஸ்ரீலங்கா தாயே நம் ஸ்ரீலங்கா
நமோ நமோ நமோ (1) .................. தாயே
நல்லெழில் பொழிசிரணி (2) .................. யாவும் நிறைவான்மணி லங்கா
ஞாலம் புகழ வள (3) .............. (4) .............. நறுஞ் சோலை கொள்லங்கா

**(12) இலங்கைப்புறவுருப்படத்துணையுடன் வினாக்களுக்கு விடை தருக.**




1. பொலன்நறுவை மாவட்டத்தை நிழற்றிக்காட்டுக.
2. அண்மையில் விமானநிலையம் அமைக்கப்பட்டுவரும் இடத்தினைக்குறிக்கும் எழுத்து எது? ..............................

**(13) பூச்சிகளின் பெயர்களை எழுதுக.**




1. ..............................  2. ..............................

**(13) வினாக்களுக்கு விடை தருக.**

1. மேற்பரப்பு முழுதும் வளைந்த திண்மம் ஒன்றை குறிப்பிடுக? ..............................
2. கூட்டுக. $\frac{2}{3} + \frac{2}{6} = \square$

# பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களுக்கு வாழ்வியல் மேம்பாடே ஆறுதல் தரும்





மீள்குடியேற்றத்தின் பின்னர் கோடிக்கணக்கான நிதி செலவிடப்பட்டு அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் மக்களின் தேவைகள் இன்னமும் முழுமையாக நிறைவுசெய்யப் படவில்லை. ஆனால் ஆட்சி அதிகாரங்களைக் கைப்பறிய அரசியல்வாதிகள் மக்களின் மேம்பாடு தொடர்பில் அக்கறை செலுத்த முன்வரவில்லை என ஈ.பி.டி.பி நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின பிரதித்தலைவருமான முருகேசு சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் பரந்தன் உமையாள் புரத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மக்களுடன் கலந்துரையாடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நீண்டகால யுத்தத்தின் பாதிப்புக்களை எதிர்கொண்ட மக்களுக்கு அவர்களின் வாழ்வியல மேம்பாடே ஆறுதலைத் தரும். அதற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட மேம்பாட்டு செயற்பாடுகள் மக்களுக்கு ஒரு நிம்மதியான வாழ்வைத்தந்துள்ள போதும் அவர்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்படவில்லை. எனவே தொடர்ந்தும் சிலகாலங்களுக்கு அபிவிருத்திப்பணிகள் முனைப்புடன் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை நாம் ஏற்கனவே விளக்கியிருந்தோம் என்றார்.

இக்கலந்துரையாடலின்போது. உமையாள்புரம் கிராமத்தின் தேவைகளான மின்சாரம், வீதிப் புனரமைப்பு, புகையிரதப் பாதையை ஊடறுத்துச் செல்லும் வீதிகளின் சீராக்கம் போன்ற தேவைகளை நிறைவேற்றித்தருமாறு மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டுக் கொண்டனர். அத்தோடு இராசாணனக் குளத்திலிருந்து வெளியேறும் நீரை கால்வாயினூடாக வெளியேற்றுவதற்கான ஏற்பாடுகளை செய்துதருமாறும் குறிப்பிட்ட அப்பகுதி மக்கள் இரசாயனத் தொழிற்சாலைக்கும் மக்களின் குடியிருப்புக்களுக்குமிடையேயான காணி எல்லையை சீரமைத்துத்தரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்ட மக்கள் மேலும் பல தேவைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இவற்றில் பல செயற்பாடுகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் உடனடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன், அப்பகுதி கிராம சேவையாளர் அம்பிகைபாலன் கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்த்தர் சுதாகரன் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# புதியமுறைமை மூலம் மொழியை கற்பிப்பது தொடர்பில் ஆய்வு

மொழியை கற்பிக்கும் புதிய முறைமை தொடர்பில் ஆய்வுகளை முன்னெடுக்கவுள்ளதாக தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு தெரிவிக்கின்றது.

இதன்மூலம் மும்மொழி செயற்றிட்டத்தை நாடு முழுவதும் உரிய முறையில் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாக அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.

உத்தியோகத்தர்கள் மற்றும் சாதாரண பிரஜைகளுக்கு மொழிகளை கற்பிக்கும் நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அமைச்சர் கூறினார்.

திறமையுள்ளவர்களுக்கு மொழியை கற்பிக்கும் செயற்றிட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும், ஆங்கில மொழியை கற்பிக்கும் விசேட திட்டமொன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். கல்வித் திணைக்களத்திற்கு மேலதிகமாக, தேசிய மொழிகள் மற்றும் சமூக நல்லிணக்க அமைச்சு மொழியை கற்பிக்கும் விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளது

இதேவேளை, மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு மொழி தொடர்பான பயிற்சிகள் பொருத்தமாக அமையுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறை மோதல் விசாரணை குழுவின் பரிந்துரை விரைவில் வெளியாகும்

வெலிக்கடை சிறை மோதல் தொடர்பில் விசாரணை செய்த மூவர் அடங்கிய குழுவின் பரிந்துரைகளை எதிர்வரும் வாரம் ஊடகங்களுக்கு வெளியிட தயார் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அறிக்கை பரிந்துரைகளை பிரச்சினை இன்றி இணக்கப் பாட்டுடன் செயற்படுத்த முடியும் என அமைச்சின் செயலாளர் எஸ்.வித்தானகே தெரிவித்தார். கடந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்ற இம்மோதலில் 27 சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர்.

இது குறித்து விசாரணை செய்ய ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி பந்துல அத்தபத்து தலைமையில் மூவர் அடங்கிய குழு அமைக்கப்பட்டது.

விசாரணை அறிக்கை கடந்த மாதம் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்கப் பட்டது. ஆனால் மூவர் அடங்கிய குழுவில் இருந்த ஒருவர் பரிந்துரைகளில் சிலவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அறிக்கையில் திருத்தம் செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது

# பிள்ளைகளை இழந்த தாய்மார்களை முரளிதரன் கொச்சைப்படுத்தியுள்ளார்

## ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர்

முத்தையா முரளிதரன் தனது அரசாங்கத்தை வானளாவ புகழ்ந்து பேசலாம். ஆனால் பெற்ற பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்களை கொச்சைபடுத்தி, முரளிதரன் பேசியுள்ளதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. என என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இருபது முப்பது தாய்மார்கள் தங்களது பிள்ளைகளைக் காணவில்லை என அழுது புலம்பி போராட்டம் நடத்துவதனால் மனித உரிமை குற்றச்சாட்டுகள் உண்மையாகிவிடாது என பெற்ற பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்களை கொச்சை படுத்தி, முரளிதரன் பேசியுள்ளதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. காணாமற் போன தங்கள் பிள்ளைகளை தேடியலையும் தாய்மார்களை கொச்சைப்படுத்தி, முத்தையா முரளிதரன் மாற்று வரலாற்றில் இன்று இடம்பிடித்து விட்டார்

1995ஆம், 1996ஆம் வருடங்களில் அவுஸ்ரேலிய நடுவர்கள் டெரலும், எமர்சனும், முரளிதரனின் பந்துவீச்சை குற்றம் சாட்டிய போது அது தொடர்பில் சர்வதேச கிரிக்கெட் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிரிக்கெட் உலகம் கோரியது. அதையடுத்து சர்வதேச கிரிக்கெட் சபை ஒரு விற்பன்னர்களின் குழுவை நியமித்து முரளிதரனின் உடம்பில் ஆய்வு உபகரணங்களை பொருத்தி, கையை அளந்து பார்த்து மருத்துவ பரிசீலனை செய்து, பந்துவீச்சை படம்பிடித்து ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியதை முரளிதரனுக்கு நான் ஞாபகப் படுத்துகிறேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாணயக்குற்றிகளை பயன்படுத்துமாறு மத்தியவங்கி கோரிக்கை

நாணயக் குற்றிகளைப் பயன்படுத்துமாறு இலங்கை மத்திய வங்கி கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இலங்கை மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது, இலங்கையில் 20.6 மில்லியன் மக்கள் உள்ளனர். இவர்களில் நாணயக் குற்றிகள் பயன் பாட்டுக்காக 15 கோடியே 74 இலட்சத்து 45 ஆயிரத்து 382 பத்து ரூபா நாணயக் குற்றிகளும் 60 கோடியே 43 இலட்சத்து 67 ஆயிரத்து 758 ஐந்து ரூபாய் நாணயக் குற்றிகளும் 50 கோடி 33 இலட்சத்து 68 ஆயிரத்து 315 இரண்டு ரூபாய் நாணய க்குற்றி களும் புழக்கத்தில் விடப்பட் டுள்ளன.

அத்துடன், 71 கோடியே 13 இலட்சத்து 34 ஆயிரத்து 933 ஒரு ரூபாய் நாணயக்குற்றிகளும் 37 கோடி 14 இலட்சத்து 22 ஆயிரத்து 434 ஐம்பது சத நாணயக் குற்றிகளும் மக்களின் பாவனைக்காக புழக்கத்தில் விடப்பட்டுள்ளன.




வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ..........................................
முகவரி :- ..........................................
பிறந்த ஆண்டு :- ..........................................
கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

..............................
பெற்றோர் கையொப்பம்






கைதடி விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் தரம் 1,2 மாணவர்கள் ஆக்கிய "ஆலஞ்சிட்டு" இதழ் 2 ஆகிய சஞ்சிகைகளுடன் மாணவர்களையும் அதிபர் ஆசிரியர்களையும் காணலாம். (51)

# இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்த ஈரானின் ஆளில்லாத விமானம் தயார்

ஈரான் அணு ஆயுதங்களை குவித்து வருவதாக இஸ்ரேல், அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டிவருகின்றன.இதனால், ஈரான் மீது தாக்குதல் நடத்துவோம் என்று இஸ்ரேல் மிரட்டி வருகிறது. ஈரானுடன் பலகட்ட பேச்சுவார்த்தைகளை அவர்கள் நடத்தி வருகின்றனர்.



இந்நிலையில், ஈரான் தனது புதியவகை விமானம் ஒன்றை நேற்று காட்சிக்கு வைத்தது. 30 மணி நேரம் வானில் வலம் வரக்கூடிய இந்த மிகப்பெரிய ஆளில்லா விமானம் விரைவில் இராணுவத்தில் சேர்க்கப்படும். அது இஸ்ரேல் வரை சென்று தாக்க வல்லமையுடையதாகும் என்றும் ஈரான் அறிவித்துள்ளது.

ஈரான் விஞ்ஞானிகள் வடிவமைத்து தயாரித்துள்ள இந்த பொட்ராஸ் ஆளில்லா விமானம் 25,000 அடி உயரத்தில் 2000 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்குதல் மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் வல்லமை படைத்ததாகும் என்றும் கூறப்படுகிறது.

ஈரானுக்கு எதிராக பல்வேறு தடைகள் இருந்தும், எமது விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ள இந்த ஆளில்லா விமானம் ஈரான் இராணுவத்திற்கு அதிக பலம் அதிகரிக்கும் என்றும் ஈரான் கூறியுள்ளது.

முன்னதாக ஈரான் தயாரித்த ஷாஹுத்- 129 என்ற ஆளில்லா விமானம் 24 மணி நேரம் வரை பயணித்து அதே 2000 கிலோமீற்றர தூரம் வரை செல்லக்கூடியதாகும்.

# அதிக வேலை கொடுத்ததால் ரோபோ தற்கொலை


ஐரோப்பிய நாடான ஆய்வுஸ்ரேயா நகரில் உள்ள வீடொன்றில் வீட்டைச் சுத்தப்படுத்தும் பணியில் ரோபோ ஈடுபட்டிருந்தது. சமீபகாலமாக மிகவும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்ட ரோபோவை இயக்கத்தை நிறுத்தி வைத்திருந்தனர்.



இவ்வாறு தொடர் வேலைப் பளுவின் காரணமாக தானாக சமையலறைக்கு சென்று அடுப்பை மூட்டி அதில் குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளது. இதனால் கட்டடம் முழுவதும் புகை பரவியதால், அனைவரும் பதறிப்போய் வெளியே வந்துவிட்டனர்.

ரோபோ, தனக்குத் தானே ரீஆக்டிவேட் செய்து தீயில் குதித்திருக்கலாம் என தீயணைப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# இந்தியாவில் 6 நகரங்களில் பெண்களுக்கு தனி வங்கி



இந்தியாவில் 6 நகரங்களில் முதன் முதலாக பெண்கள் வங்கி தொடங்கப்பட்டது. பெண்களுக்கு அதி காரமளிப்பதற்காக இந்த முதல் வங்கி முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் பிறந்த நாளான நேற்றுமுன்தினம் தொடக்கப்பட்டது.

மும்பையில் நடந்த விழாவில் பிரதமர் மன்மோகன்சிங் சென்னை, கொல்கத்தா, கவுகாத்தி, அகமதாபாத், பெங்களூரு, மும்பை ஆகிய 6 நகரங்களில் அமைக்கப்பட்டுள்ள பெண்கள் வங்கியை தொடங்கி வைத்தார்.

சென்னையில் அண்ணா சாலையில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி அலுவலகத்தில் தரை தளத்தில் பெண்கள் வங்கி செயல்படுகிறது. 1162 சதுர அடியில் செயல்படும் இந்த வங்கியில் பெண்களுக்கு சேமிப்பு கணக்குகள் தொடங்கப் படும்.

சுய உதவிக்குழுக்கள் மூலம் தொழில் செய்ய கடன் உதவி வழங்கப்படுகிறது. பெண்கள் முன்னேற்றத்திற்கான ஆலோசனைகளும் வழங்கப்படும். டில்லியை தலைமை அலுவலகமாக கொண்டு பெண்கள் வங்கி செயல்படுகிறது.

பெண்கள் வங்கியின் சென்னை கிளை மேலாளர் கூறும்போது, இந்த வங்கி மற்ற வணிக வங்கிகள் போல செயல்படும். அதனுடன் அனைத்து பண நடவடிக்கைகளும் இருக்கும்.

ஆனால், பெண்களுக்கு மட்டும் இவ்வங்கி முக்கியத்துவம் அளிக்கும் வகையில் சேவை வழங்கப்படும்.

இந்த கிளை எட்டு அதிகாரிகளுடன் செயல்படும் தலைமை அதிகாரி மட்டும் மற்ற பொதுத் துறை வங்கிகளில் இருந்து நியமிக்கப்படுகிறார். மற்ற அலுவலர்கள் நேரடியாக தேர்வு செய்யப்படுவார்கள். வங்கி ஊழியர்களில் ஆண்களும் இடம் பெறுவார்கள். பெண்கள் வங்கியில் ஆண்களும் கணக்கு தொடஙகலாம்.

இந்த வங்கி வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், சிறுபான்மை மற்றும் மாற்றுத்திறன் படைத்தவர்கள் உள்ளிட்ட ஏழ்மை நிலையில் உள்ளவர்கள் முன்னேற்றத்திற்காக செயல்படும் என்றார்.




# இந்தோனேசிய ஜனாதிபதியை உளவு பார்த்த அவுஸ்ரேலியா



இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பாம்பங் யுதோயோனோ, அவரது மனைவி அனி மற்றும் மூத்த அமைச்சர்களின் தொலைபேசி உரையாடல்களை அவுஸ்திரேலிய உளவு அமைப்பு ஒட்டுக்கேட்க முயன்றதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து விளக்கம் அளிக்குமாறு அவுஸ்ரேலியாவை இந்தோனேசிய ஜனாதிபதி மாளிகை கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தோனேசிய ஜனாதிபதி மற்றும் அவருக்கு நெருக்கமான 9 பேரை உளவு பார்த்ததாக அவுஸ்ரேலிய ஒளிபரப்புக் கழகமும், "தி கார்டியன்" நாளிதழும் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவைச் சேர்ந்த தேசிய உளவு அமைப்பின் முன்னாள் ஊழியர் எட்வர்டு ஸ்னோடெனிடமிருந்து பெற்ற இரகசிய ஆவணங்களின் அடிப்படையில் இச்செய்தியை அவை வெளியிட்டன. அவுஸ்ரேலியப் பிரதமராக தொழிலாளர் கட்சி[illegible]ச் சேர்ந்த கெவின் ரூத் பதவி வகித்தபோது, மின்னணு புலனாய்வு அமைப்பும், பாதுகாப்பு இயக்குநரகமும் இணைந்து, 2009-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 15 நாட்களாக இந்தோனேசிய ஜனாதிபதி சுசிலோ பாம்பங்கின் தொலைபேசியை ஒட்டுக்கேட்டுள்ளன.

# ஆப்கானில் குண்டுவெடிப்பு 9 சிறுவர்கள் உயிரிழப்பு



ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்த பக்திகா மாகாணத்தில் நேற்று சாலையோரம் புதைத்து வைத்திருந்த வெடிகுண்டு ஒன்று வெடித்துள்ளது. இதில் அங்கு விளையாடிக் கொண்டிருந்த ஏழு சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.இவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே குடும்பத்தைச் சேர்ந்த மேலும் மூன்று சிறுவர்கள் பலத்த காயமடைந்துள்ளார்கள் என்று அம்மாகாண ஆளுநரின் செய்தித் தொடர்பாளரான மோக்ளிஸ் தெரிவித்துள்ளார். இதேபோல், நாட்டின் தென் பகுதி மாகாணமான சபுலில் தெருவில் சென்றுகொண்டிருந்த வாகனம் ஒன்று சாலையில் புதைக்கப்பட்டிருந்த வெடிகுண்டின் மீது மோதியதில் இரண்டு சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.


இவர்களின் தந்தையும், மற்றொரு சிறுவனும் காயமடைந்துள்ளனர்..இந்தக் குடும்பத்தினர் மாகாணத் தலைநகர் காலட்டிற்கு பொருட்கள் வாங்க தங்களது வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டதாக மாகாணத் துணை ஆளுநர் முகமது ஜன் ரசூல்யார் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஞாயிறன்று காந்தகாரில் கண்டெடுக்கப்பட்ட ஆறு தலையில்லா சடல[illegible]ள் முதலில் அரசு ஒப்பந்ததாரர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. பின்னர் இறந்தவர்கள் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்று அடையாளம் காணப்பட்டதாக அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சாலையோர குண்டுகள் மற்றும் இதர மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு சாதனங்களையே கிளர்ச்சியாளர்கள் தங்களுடைய பெரும்பான்மையான தாக்குதல் ஆயுதங்களாகப் பயன்படுத்தி வருகின்றனர். ஆனால், இவற்றால் பொது மக்களே பெருமளவில் பலியாவதாக அரசுத் தகவல்கள் தெரிவிக்கின்றன

# இஸ்ரேல்-பலஸ்தீனம் நல்லெண்ண நடவடிக்கை

எதிரிகளாக இருக்கும் இஸ்ரேல் - பலஸ்தீன நாடுகள் பகைமையை மறந்து மீண்டும் சமாதான பேச்சுவார்த்தையை தொடங்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியது.



அமைதிப் பேச்சுவார்த்தையை விரும்பும் நல்லெண்ணத்தின் அடையாளமாக 104 பலஸ்தீன கைதிகளை விடுதலை செய்வதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு சமீபத்தில் அறிவித்தார்.

இதில் முதல் கட்டமாக இஸ்ரேல் சிறையில் இருந்து 26 பலஸதீன கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதனையடுத்து, இஸ்ரேல் - பலஸ்தீன குழுவினருக்கிடையே முதல் கட்ட அமைதி பேச்சுவார்த்தை கடந்த 14ஆம் திகதி தொடங்கியது. பேச்சுவார்த்தையில் பங்கேற்ற இருநாட்டு அதிகாரிகளும் சந்தித்து கை குலுக்கும் காட்சிகளை இஸ்ரேல் ஊடகங்கள் வெளியிட்டன.

எனினும், பேச்சுவார்த்தை நடந்த இடம் பற்றிய தகவல்களை இரு நாடுகளுமே இரகசியமாக வைத்திருந்தன. இதற்கிடையில், ஜெருசலேம் அருகேயுள்ள குவலாண்டியா அகதிகள் முகாமுக்குள் நுழைந்த சீருடை அணியாத இராணுவ அதிகாரிகள யூசுப் என்பவரைக் கைது செய்தனர். அவரை கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்த நூற்றுக் கணக்கான பலஸ்தீனர்கள், ராணுவ அதிகாரிகளின் மீது கற்களையும், கையெறி குண்டுகளையும் வீசித் தாக்குதல் நடத்தினர்.

அதிகாரிகள் அளித்த தகவலையடுத்து விரைந்து வந்த இஸ்ரேல் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியவர்கள் மீது துபபாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவத்தில் 3 பலஸ்தீனர்கள் பலியாகினர்.

இந்தத் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்த பலஸ்தீன பிரதமர் இரமி ஹம்துல்லா, இதைப் போன்ற தாக்குதல்கள் எங்கள் மக்களுக்கு உலக நாடுகள் பாதுகாப்பை வழங்க வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன என்று கூறினார்.

# மேவன் செய்மதியை விண்ணுக்கு ஏவியது நாசா

செவ்வாய் கிரகத்திற்கான மேவன் என்ற செய்மதியை நேற்று முன்தினம் அதிகாலை அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா வெற்றிகரமாக ஏவியுள்ளது.



புளோரிடாவிலுள்ள ஏவு தளத்தில் இருந்து அட்லஸ் வீ என்ற விண்கலம் மூலம் இந்த செய்மதி விண்ணுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

671 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் 10 மாத பயணமாக செவ்வாய் கிரகத்திற்கு இந்தச் செய்மதி அனுப்பட்டுள்ளது.

செவ்வாய்கிரகத்தின் உயர் வளிமண்டலம் தொடர்பில் ஆய்வு செய்யப்படவுள்ளதாக நாசா தெரிவித்துள்ளது.

மேற்ப்பரப்பில் திரவ நீர் காணப்படுவதற்கு ஏதுவாக தடித்த போர்வையான வாயுக்கள் காணப்படலாம் என ஆதாரங்கள் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

# ஆசிரியரைக் காணவில்லை; வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

மாகாணசபைத் தேர்தலில் வாக்களிப்பதற்காக வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது காணாமற் போயுள்ள வவுனியா அல்ஹாமியா பாடசாலையைச் சேர்ந்த கார்த்திகேசு நிருபன் என்ற ஆசிரியரைக் கண்டு பிடித்துத் தருமாறு ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று வவுனியாவில் நடத்தியுள்ளனர்.

வவுனியா தெற்குக் கல்வி வலயப் பணிமனைக்கு எதிரில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திற்கு இலங்கை ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது.

ஆசிரியர் நிருபனைக் கடத்தியவர்கள் அவரை விடுதலை செய்ய வேண்டும் எனக் கோரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த ஆசிரியர்கள் ஆசிரியர்களைக் கடத்துவதை நிறுத்துமாறும், அவர்களைக் கைது செய்ய வேண்டாம், என்றும் கோரினர்.

இந்த ஆசிரியர் காணாமற் போய் இரண்டு மாதங்களாகி விட்ட போதிலும், மனித உரிமை ஆணைக்குழுவினரும், பொலிஸாரும் இன்னும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என கண்டனம் தெரிவித்துள்ளனர்.

யுத்தம் முடிவடைந்த பின்னர் நாட்டில் கடத்தல்கள் இல்லை. யாரும் காணாமற் போகவில்லை என்று அரசாங்கம் வெளிநாடுகளுக்குக் கூறுகின்றது. ஆனால் தேர்தலில் வாக்களிப்பதற்காகச் சென்று காணாமல் போயுள்ள ஆசிரியர் நிருபன் தொடர்பில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கத் தயாராக இல்லை. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிமனையில் இருந்து பேரணியாகச் சென்ற ஆசிரியர்கள், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளித்து, இன்னும் ஒரு மாதத்திற்குள் உரிய நடவடிக்கை இல்லையேல் பரந்த அளவில் போராட்டம் வெடிக்கும் என அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

# தமிழுக்கு அதிக முக்கியத்துவம்; அமைச்சர் டக்ளஸ் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காட்சிப்படுத்தப்படும் விபரக் குறிப்புக்கள் அனைத்தும் தமிழில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நேற்று யாழ். செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் திணைக்களங்களால் காண்பிக்கப்படும் விபரக் குறிப்புக் காட்சிகள் ஆங்கில மொழியிலேயே இருந்தன.

இவை எமது மொழியிலேயே காண்பிக்கப்பட வேண்டும். அதாவது தமிழுக்கு முக்கியத்துவம் வழங்கி தமிழ் மொழியிலேயே காண்பிக்கப்பட வேண்டும் என அவர் கோரினார். இனிவரும் கூட்டங்களில் இது நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ,பா)

## புலிகளே...

புலிகளின் குற்றச்சாட்டுக்களை மட்டுமே கமரூன் அறிந்து கொண்டுள்ளார். இறுதிக் கட்ட போரின் போது புலிகள் மக்களை மனிதக் கேடயமாக பயன்படுத்திக் கொண்டனர் என ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

## காணிகள்...

17 ஏக்கர் வயல் காணியே இன்றைய தினம் கட்டளைத்தளபதி ஜெனரல் மார்க்கினால் உரிமையாளர்களிடம் கையளிக்கப் படவுள்ளது. (125)

## இராஜதந்திர...

அழைப்பை டேவிட் கமரூன் தட்டிக்கழித்துவிட்டதாகவும் உயர மட்ட தகவல்கள் தெரிவித்துள்ளன.

பிரிட்டிஷ் பிரதமரின் கொழும்பு விஜயம் ஏற்படுத்திய சர்ச்சையும் பரபரப்பும் தணிவதற்கிடையில் அரசின் மேற்படி குற்றச்சாட்டு இப்போது எழுந்துள்ளது.

## இடம்பெயர்ந்த...

அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து வலி. வடக்கு மீள்குடியமர்வு தொடர்பான மேற்படி பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முன்மொழிந்தார். தொடர்ந்து இப்பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு மேற்படி தீர்மானம் ஏகமனதான நிறைவேற்றப்பட்டது.

# கூட்டமைப்பின் புறக்கணிப்பு துரதிஷ்டவசமானது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமானது நல்ல நோக்கங்களை முன்வைத்து நடாத்தப்படுகின்ற போதும் தவறான புரிதல்கள் மாறுபட்ட உள்நோக்கங்கள் காரணமாக இதில் ஏனைய தரப்பினரும் கலந்து கொள்ளாமை துரதிஷ்டவசமானது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரும், யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுக்களின் இணைத்தலைவருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர், பல காரணங்களை முன்னிட்டு கடந்த சில மாதங்களாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெற இயலாத நிலை ஏற்பட்டிருந்தது. இம்மாதம் நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட விவாதங்கள் ஒருமாத காலமாக தொடர்ந்து நடக்கவிருக்கும் நிலையில் அதற்கு முன்பாக மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடாத்த அதன் வழமையான ஒழுங்கு முறைகளுக்கு ஏற்ப ஏற்பாடு செய்யும்படி குழுவின் செயலாளரான மாவட்ட செயலாளருக்கு அறிவித்திருந்தேன்.

இதனைத் தவறான புரிதல்களுக்கு உள்ளாக்கியதால் வடக்கு மாகாண முதல்வர், ஏனைய உறுப்பினர்கள், நகர, பிரதேச சபைகளின் பல உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை.

அவர்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு பல வாக்குறுதிகளை அவர்கள் வழங்கியிருந்தார்கள். அதைப்பற்றி கலந்துரையாடி அதனது நடைமுறைகள் தொடர்பில் ஆராய இது ஒரு நல்ல சந்தர்ப்பமாக இருந்தது. இருப்பினும் அவர்கள் கலந்து கொள்ளாதது துரதிஷ்டவசமானதாகும்.

மாகாணசபை முறைமையை பாதுகாக்கும் பொறுப்பும் கடமையும் எமக்கு உண்டு. இதனை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளோம். மக்கள் நலன்சார்ந்து மாகாண முதல்வர் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு நாம் நிச்சயம் ஒத்துழைப்பு வழங்குவோம்.

பொதுநலவாய நாடுகளின் மகாநாடு மிகவும் சிறப்பாக எதிர்பார்த்ததை விட சிறப்பாக நடைபெற்றது. இது அரசுக்குக் கிடைத்த வெற்றியாகும்.

இந்தியப் பிரதமரும் இம்மாநாட்டில் கலந்து கொண்டிருக்க வேண்டும். அப்படி ஒரு நிலை ஏற்பட்டிருந்தால் நிச்சயமாக எமது மக்களுக்கு பல உதவிகளை அறிவித்திருப்பார். புனர்வாழ்வு திட்டங்களை அறிவித்திருப்பார்.

எமது கடற்றொழிலளர்களது பிரச்சினைகள் பற்றி கதைத்திருக்கலாம். 13 ஆவது திருத்தத்தை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடி இருக்கலாம். எனவே அவர் வராததும் எமது மக்களுக்கு துரதிஷ்டவசமானதாகவே அமைந்து விட்டது என்றார்.

## யுத்தத்துக்குப்...

மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியின் வடமாகாணசபையின் ஒதுக்கீடு 584 மில்லியன் ரூபாவும், அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் 1026 மில்லியன் ரூபாவும் மற்றும் விசேட வேலைத்திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடு 15420 மில்லியன் ரூபாவும் அடங்குவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அரச அதிபர், துறைரீதியான செயற்பாடுகளுக்கே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும், விவசாயம், கைத்தொழில், குடியிருப்புகள், பொருளாதார உட்கட்டுமானங்கள், போக்குவரத்து, சமூக உட்கட்டமைப்பு, குடிநீர் போன்றவை இவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

2013 ஆம் ஆண்டு நெல் உற்பத்தி 1236 மெற்றிக் தொன்னாக குறைவடைந்துள்ளது. இந்தவருடம் அதனைப் பூர்த்திசெய்து 2014 ஆம் ஆண்டு எதிர்பார்க்கும் இலக்கை எட்டவேண்டிய தேவையிருப்பதாகவும் தெரிவித்த அரச அதிபர் விவசாயிகளுக்கு காப்புறுதித் திட்டத்தையும் அறிமுகம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

வெங்காயம், மிளகாய், வாழை, திராட்சை உற்பத்தி போன்றவை தொடர்ச்சியாக முன்னேற்றம் கண்டுவருவதாகவும் மீன்பிடியைப் பொறுத்தவரையில் யுத்தத்திற்கு முன்னர் அதிகமாக இருந்த மீன் உற்பத்தி தொடர்ந்துவந்த சூழலில் குறைவடைந்து வந்துள்ளது.

ஆனால் யுத்தம் நிறைவடைந்த நிலையில் உற்பத்தி அதிகரித்து 2[illegible] ஆயிரம் மெற்றிக் தொன்னாக 2013 இல் அதிகரித்துள்ளது. இதில் இருந்து சுமார் 6 வீதம் தேசிய உற்பத்திக்கு சேர்க்கமுடிகின்றது.

இதனிடையே வடபகுதி கடற்பரப்பில் மீன்குஞ்சுகளின் எண்ணிக்கையும் குறைந்து செல்வதாக ஆய்வுகள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்த அரச அதிபர், இந்த நிலை எதிர்காலத்தில் மீன் உற்பத்தியில் பாதிப்பை உண்டுபண்ணும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் ஊக்குவிப்புத் திட்டங்களைப் பொறுத்தவரையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தொழிலாளர்களுக்கான பொருட்களை பெற்றுக்கொடுத்து ஊக்குவிப்பதாகவும் தெரிவித்ததுடன் யாழ். மாவட்டத்தில் இன்னமும் 30 ஆயிரம் வீடுகள் தேவையாகவுள்ளதாகவும் தற்சமயம் 9500 வீடுகள் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கைக்கும் வடபகுதிக்கும் விஜயம் செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் வீட்டுத்திட்ட தேவை குறித்து தெரியப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். இதன்மூலம் இந்தத் தேவையை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் தெரிவித்தார். (பா,இ)

## மக்கள் நலன்...

நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் க.கமலேந்திரன், யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண அமைச்சுக்களின் செயலர்கள், யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ரூபினி வரதலிங்கம் மற்றும் பிரதேச செயலர்கள் மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களோ வடமாகாண முதலமைச்சரோ கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபை மற்றும் மாகாணசபை உறுப்பினர்களோ கலந்துகொள்ளவில்லை. இவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இருக்கைகள் வெற்றிடமாகவே காணப்பட்டது.

யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றியதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையுரையாற்றினார். அவர் தனது தலைமையுரையின்போது, இந்த யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் வடமாகாண சபை முதலமைச்சரோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களோ கலந்துகொள்ளாமை துரதிஷ்டவசமானதே என்று தெரிவித்தார்.

வடமாகாணசபைத் தேர்தல், பொதுநலவாய அரசுத் தலைவர்கள் மாநாடு போன்றவற்றின் காரணமாக இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் பின்தள்ளப்பட்டிருந்தது. இருந்தும் 14 நாட்களுக்கு முன்னர் இது குறித்து இன்றைய தினத்தில் அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறுமென்று சகல திணைக்களத் தலைவர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தும் சிலருக்கு அழைப்பிதழ் கடிதங்கள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து தபால் திணைக்கள அதிகாரியுடன் தொடர்புகொண்ட அமைச்சர் தமக்கு இவ்விடயம் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொண்டார். அத்துடன் அபிவிருத்திக் குழுக் கூட்டம் தொடர்பான தரவுகள் அனைத்து திணைக்களத்திலும் தமிழில் தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் எதிர்காலத்தில் இந்த நடைமுறையை பின்பற்றுமாறும் திணைக்களத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார்.

வலி. வடக்கில் மக்கள் மீள்குடியேற்றம் சம்பந்தமாக எவ்வளவு மக்கள் முகாம்களில் வசிக்கின்றனர், எவ்வளவு பேர் உறவினர், நண்பர்களின் வீடுகளில் வசிக்கின்றனர், எவ்வளவு மக்களுக்கு காணி இருக்கின்றது, எவ்வளவு மக்களுக்கு காணி இல்லை என்பது குறித்த தகவல்களை பிரதேச செயலர்களை திரட்டி தமக்கு சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்ட அமைச்சர் காணிகள் இல்லாதவர்களை எவ்வாறு மீள்குடியமர்த்துவது சம்பந்தமாக ஆராயவேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய அரசுத் தலைவர்களின் மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்துகொண்டிருந்தால் இந்திய வீட்டுத் திட்டம், இந்திய மீனவர்களது பிரச்சினைகள் குறித்து கதைத்து தீர்வுகாண்பதற்கு திட்டமிட்டிருந்ததாகவும், ஆனால் அது கைகூடவில்லை என்றும் தெரிவித்த அமைச்சர் இந்திய வெளியுறவு அமைச்சர் இருதரப்பு சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தி மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துவருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மு.சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், வடமாகாண சபை எதிர்க்கட்சித்தலைவர் க.கமலேந்திரன், யாழ்.மாநகர சபை முதல்வர் ஆகியோரர யாழ். மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு விடயங்களை அமைச்சுகளுக்கு தெளிவுபடுத்திக் கூறியதுடன் அபிவிருத்தி சம்பந்தமான பல்வேறு கோரிக்கைகளையும் முன்வைத்தனர். (பா,இ)

# சிவில் பாதுகாப்பு குழுக்களை மறுசீரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்ட ஒழுங்கை சீர்குலைக்கும் விதத்தில் அண் மைக்காலமாக நடைபெற்றுவரும் சம்பவங்களையடுத்து யாழ். மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுக்களை மீள்பரிசீலனை செய்து ஒழுங்கமைத்துச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்ற அபி விருத்திக்குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு நடவடிக்கை எடுக் கத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுக்கூட்டத்தில் பங்கேற்றிருந்த ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மற்றும் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளரும், பருத்தித் துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமாகிய சிறிரங் கேஸ்வரன் ஆகியோர் யுாழ்.குடா நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு நடவடிக்கைகளை பொலிஸார் கட்டுப்படுத்தவேண்டும் என்று நடைபெற்ற சம்பவங்கள் சிலவற்றை அபிவிருத்திக் குழுவின் தலைவரும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்தே இவ்வாறான நிலைக்கு பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூட்டத்திற்கு வந்திருந்த யாழ்.பொலிஸ் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் வினாவியபோது, அவர் இது குறித்து நட வடிக்கை எடுத்துவருவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர் ஏன் வரவில்லை என்றும் அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

# தூக்கில் தொங்கிய சடலம் மீட்பு

(பருத்தித்துறை)

இளம் குடும்பஸ்தர் ஒருவர் தனது வீட்டின் பின்புறமாக வுள்ள வேப்பமரமொன்றில் சுருக்கிட்டு தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் திங்கட் கிழமை அவர் சடலமாக மீட் கப்பட்டுள்ளார்.

தாளையடி ஆழியவளை யைச் சேர்ந்த செல்வராசா தேவதாஸ் (வயது - 34) என்ற 4 பிள்ளை களின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார்.

இவரது சடலம் மருதங் கேணி அரசினர் கிராமிய வைத் தியசாலையில் ஒப்படைக் கப்பட்டதைத் தொடர்ந்து பருத் தித்துறை மரண விசா ரணை அதிகாரி சதா னந்தன் சிவராஜா மரண விசாரணையை நடத்தினார்.

இப்பிரதேச பரி சோதனையை வைத் திய கலாநிதி மயி லேறும் பெருமாள் நடத்தியபின்னர் சட லம் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள் ளது. (109)

JCB, Backhoe
இயந்திரம் வாடகைக்கு உண்டு
கட்டடங்கள் இடித்து அகற்ற, காணிகள் துப்பரவு வெய்வதற்கு மணித்தியாலய அடிப்படையில் வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 077 4150 799, 077 2605 718
(C/3199)

பிரித்தானியா, கனடா செல்லும் மாணவர்களுக்கு சிகரத்தின் வாழ்த்துக்கள்




சிகரம் ஊடாக INTI International University வெளிநாட்டுப் பட்டக் கல்விப் பரிமாற்றத் திட்டத்தில் 2013 பெப்ரவரி மாதம் இணைந்து, ஆறு மாதங்களுக்குள் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பிரித்தானி யாவின் முன்னணி இயந்திரவியல் பல்கலைக்கழகமான University of Strathclyde, Glasgow பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள எமது மாணவன் **பா.கபில்ராஜ்** தனது கல்விப் பயணத்தில் மென்மேலும் வளர எமது வாழ்த்துக்கள்.

இதேபோன்று, SUNWAY பல்கலைக்கழகத்தில் அமெரிக்க பட்டக் கல்வி பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கல்வி கற்று 2014 ஜனவரியில் கனடாவின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான YORK University இல் இணையவுள்ள மாணவன் **து.பிரணவ்சரணையும்** வாழ்த்துகிறோம்.

மேலும், தற்போது INTI International University யில் அவுஸ்ரேலியா Wollongong பல்கலைக்கழகப் பட்டக்கல்வியைத் தொடர்ந்து, விரைவில் University of Wollongong, Australia வுக்குச் செல்லவுள்ள எமது மாணவர்களையும் அவர்களின் இலட்சியம் நிறைவேற வாழ்த் துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(C/2587)

YORK UNIVERSITÉ UNIVERSITY
THE UNIVERSITY OF WOLLONGONG AUSTRALIA
University of Strathclyde Engineering

சிகரம் SIKARAM MEDIA & EDUCATION
இல. 153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 0773 616 798
இணையம்:www.sikaram.lk

# பிரிட்டன் பிரதமர் கமரூன் தவறாக வழிநடத்தப்பட்டுள்ளார்

## முத்தையா முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

பிரித்தானிய பிரதம மந்திரி டேவிட் கமரூன் இலங்கையில் தவறாக வழி நடத்தப்பட்டதாக இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் தெரிவித்துள்ளார்.

சனல் 4 தொலைக்காட்சிக்கு வழங்கிய செவ் வியின் போதே, அவர் இந்தக் கருத்தை வெளி யிட்டுள்ளார்.

இரண்டு தரப்பினர் யுத்தத் தில் ஈடுபட்டனர். இதன்போது, நடந்தது எதுவென்பது யாருக் கும் தெரியாது.

இந்த நிலையில், பிரித்தா னிய பிரதமர் சிறிய வயதில் இலங்கைக்கு அல்லது யாழ்ப் பாணத்திற்கு வந்தாரோ தெரி யாது. ஆனால், அவருக்கு சிலர் அங்கு என்ன நடந்தது என்பதை தெரிவித்திருக்கிறார் கள். அதன் அடிப்படையில் அவர் அங்கு சென்றிருக்கிறார்.

இதன் போது இருபது முப் பது தாய்மார் வந்து அழுவதை உண்மை என எடுத்துக்கொள்ள லாமா? எனவே, அங்கு இவர் கள் தவறாக வழி நடத்தப்பட் டிருக்கலாம்.

இந்த நிலையில், உண் மையை கண்டறிவது கடினமா னது என்று முத்தையா முரளி தரன் குறிப்பிட்டார். நாங்கள் ஏன் பழையனவற்றை, தோண்டு கிறோம்? அவை போனது போனதாக இருக்கட்டும். முன் னோக்கி சிந்திக்கும் போதே எதனையும் செய்ய முடியும்.

நான் ஒரு தமிழன். 1977 ஆம் ஆண்டு எனது வீடு உட்பட்ட உடமைகள் எரியூட்டப்பட்டன. எனினும் நான் அதனைப்பற்றி சிந்திக்கவில்லை என்று முரளி தரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கிரிக்கட் வீரர் முத்தையா முரளி தரனின் கருத்



துக்களில் பிழையில்லை என பிரித் தானிய பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் சிறந்த ஓர் நிலைப்பாட்டை ஏற்படுத்து வது அவரது கடமையாகும். இலங்கையர் என்ற ரீதியில் அவரது கருத்துக்களில் பிழை யில்லை. நாடு தொடர்பில் நன் மதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் முரளிதரன் கருத்து வெளி யிட்டார்.

முரளியின் சுழற்பந்தை என் னால் சரியாக விளங்கிக் கொ ள்ள முடியவில்லை. அதிர்ஷ்ட வசமாக பந்துகளை மட்டை யால் அடிக்கக் கிட்டியது என அவர் தெரிவித்துள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு உள்ளக தீர்வே சாத்தியம்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்க முயற்சிகள் தொடர் பில் தென்னாபிரிக்காவின் அனு பவங்களைப் பகிர்ந்து கொள் ளவும், அவர்களிடம் இருந்து பாடங்களைக் கற்றுக்கொள் ளவும் தயாராக இருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரி வித்துள்ளார்.

அதேவேளை, இலங்கை யின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை உள்ளக ரீதியி லேயே காணப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதி யாக இருப்பதாக கூறியுள்ள அவர், இது தொடர்பில் தென் னாபிரிக்காவின் அனுபவங் களைப் பகிர்ந்து கொண்டு உள் ளக செயற்பாடுகளின் அடிப் படையில் அரசியல் தீர்வைக் காணவேண்டும் என்பதே அர சாங்கத்தின் நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் ஏற்பட்ட காயங் களை ஆற்றுப்படுத்தவும், இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் தமது அனுபவங் களை பகிர்ந்து கொள்ளவும் தென்னாபிரிக்கா தயாரகவுள் ளதாக பொதுநலவாய மாநாட் டில் நிறைவில் ஜனாதிபதியுடன் இணைந்து நடத்திய ஊடகவிய லாளர் மாநாட்டில் அந்நாட்டின் ஜனாதிபதி ஜேக்கப் சூமா தெரி வித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையில் இனங்களுக்கு இடையில் நல் லிணக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாட்டுக்கு உதவிகளை வழங்க முன்வந்த தென்னா பிரிக்க ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் பசில் ராஜபக்ச, அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஆனால் இனப்பிரச்சினைக் கான அரசியல் தீர்வை உள்ளக ரீதியிலேயே காணப்பட வேண் டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது. இது குடும்பப் பிரச்சினையாகும். இதனை குடும்பத்தில் உள்ளவர் களே பேசித் தீர்க்க வேண்டும். அரசாங்கமும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் உள்நாட்டுத் தரப் புக்களாகும். எனவே இது தொடர்பில் உள்நாட்டில் இருப் பவர்களை பேச்சு நடத்தி தீர்வு காணவேண்டும்.

ஜெனிவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனி தவுரிமைகள் ஆணைக்குழுவில் கூட்டத் தொடரில் அரசாங்கம் மீது மேலும் அழுத்தங்கள் பிர யோகிக்கப்படும் என எதிர்பார்க் கப்படும் நிலையில், பசில் ராஜ பக்ச இவ்வாறு கூறியுள்ளார்.

# மரண தண்டனைக் கைதிக்கு கிடைத்தது விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு உதவிய குற்றச்சாட்டின் அடிப்படையில் மரண தண் டனை விதிக்கப்பட்ட பெண் ஒரு வர் விடுதலை செய்யப்பட்டுள் ளார்.

பிரதி மீள்குடியேற்ற அமைச் சர் விநாயகமூர்த்தி முரளிதர னின் நெருங்கிய சகாவான கந்தசாமி வசந்தன் என்பவரை கொலை செய்வதற்கு குறித்த பெண் ஒத்துழைப்பு வழங்கிய தாக குற்றம் சுமத்தப்பட்டி ருந்தது. இந்தக் குற்றச்சாட் டுக்காக மட்டக்களப்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது.

இந்தத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுவொன்று தாக்கல் செய்யப் பட்டிருந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த லீலா என்பவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டி ருந்தது. 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24 ஆம் திகதி இந்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது.

2010 ஆம் ஆண்டு ஒக்ரோ பர் மாதம் 13 ஆம் திகதி குறித்த பெண்ணுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. கொலை யுண்ட வசந்தன் இருந்த இட த்தை குறித்த பெண், புலி உறுப்பினர்களுக்கு காட்டிக் கொடுத்தாக முறைப்பாடு செய் யப்பட்டிருந்தது.

வீட்டைத் தட்டி வசந்தனை அழைத்தவுடன் ஆயுதாரிகள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக குறித்த பெண் தெரிவித் துள்ளார். ஆயுததாரிகள் அச்சு றுத்திய காரணத்தினால் இவ் வாறு வசந்தன் வீட்டை காண் பித்ததாகத் குறித்த பெண் தெரி வித்துள்ளார்.

வழக்கை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், குறித்த பெண் குற்றமற்றவர் எனத் தெரிவித்து விடுதலை செய்துள்ளது.

# "வாழ்வின் எழுச்சி" இதுவே சரியான பதம்

(யாழ்ப்பாணம்)

'திவிநெகும' என்ற பதத்தை பாவிப்பதை தவிர்த்து வாழ்வின் எழுச்சி என்ற பதத்தை பயன்படுத்துமாறு நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த பிரேரணையின் பிரகாரம் தமிழில் இப்பதத்தை வாழ்வின் எழுச்சி என பிரகரனப்படுத்தப்பட்டது. இவ்வாறு வாழ்வின் எழுச்சித்திட்டம் என கூறுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தார். (இ,பா)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 நவம்பர் 20 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.